விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 24
ஒலி 090 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 05 ஞாயிற்றுக்கிழமை (19.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்க திட்டமிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் இன்று நள்ளிரவுடன் முடிவடைகிறது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்க திட்டமிடப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் J.C.அலவத்துவல குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் 19

## வடக்கில் திருட்டுடன் தொடர்புடைய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ரீதியில் பல்வேறு திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட மூவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய 19

## வடக்குக்கு உரத்தை விநியோகிக்க நடவடிக்கை
### விவசாய அமைச்சு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்துக்கு உரத்தை விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட உரத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு 11 ஆயிரத்து 537 மெற்றிக் தொன் உரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மன்னார் மாவட்டத் 19

# இலங்கைக்கு எப்போதும் இந்தியா உதவி செய்யும்
## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

(புதுடில்லி)

அயல்நாடு என்ற முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்கு இந்தியா எப்போதுமே உதவி செய்யும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.



புதுடில்லியில் இடம்பெற்ற கண்காட்சி நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரத்தம் தண்ணீரைவிட அடர்த்தியானது என்ற பழமொழியை நினைவூட்டிய அவர், இலங்கை நெருக்கடியான தருணங்களை எதிர்கொள்ளும்போது இந்தியா உதவுவது இயல்பான விடயம் எனத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், இந்தியா முன்னேறுவது மிகவும் இயல்பானது.

அயல்நாடுகளிற்கு முன்னுரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் அயல் நாடுகள் நெருக்கடியில் உள்ள போது இந்தியா அதற்கு ஆதரவாகவே செயற்பட்டுள்ளது.

நீங்கள் (இலங்கை) இந்த நெருக்கடியிலிருந்து விடுபடுவீர்கள் என நான் 19

## பாடசாலை விடுமுறை விபரங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறை மற்றும் புதிய தவணை தொடர்பான விபரங்களை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளின் முதலாம் தவணை கல்விச் செயற்பாடுகள் ஏப்ரல் 5ஆம் திகதி தொடங்கும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஏப்ரல் 16ஆம் திகதி வரை முதலாம் 19

## அராலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அராலி சந்தியில் நேற்றையதினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் 3ஆம் கட்டை ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த ஜெனட் மாறன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஊர்காவற்றுறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பட்டா 19

## ஐ.எம்.எப் ஒப்பந்தம் அடுத்தவாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்
### நிதி இராஜாங்க அமைச்சர்



(கேகாலை)

சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். 19

## வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐவர் கைது
### 2 மோ.சைக்கிள், 3 வாள்கள் மீட்பு



19

## கடந்த 2022ஆம் ஆண்டு 1.1 மில்லியன் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

(கொழும்பு)

கடந்த 2022ம் ஆண்டில் 1.1 மில்லியன் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியவர்களில் 27.6 வீதமானவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறும் நோக்கில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கி வெளி 19

## யாழ்ப்பாணத்தில் போதை, வன்முறை சம்பவங்களுக்கு முடிவு கட்டுவோம்
### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில்போதைப் பொருள் பாவனை மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு முடிவு கட்டுவோம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வாலையம்மன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நொதேன் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணமகன் தேவை

1990 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை. தற்சமயம் சுவிசில் உள்ளார். விசா இல்லை A/L வரை படித்தவர் (NON.R.C) கிறிஸ்தவ மணமகனைத் தேடுகிறோம். மணமகன் சுவிசில் இருந்தால் விரும்பத்தக்கது. PR முக்கியம் (14909)

**077 272 7195**

# சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

UK, USA, JAPAN, CANADA ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்பு விசா தேவைப்படுவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். (14917)

Hybrid International Hub (pvt) Ltd Jaffna.

**076 250 0098/ 021 222 1265**

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 076 097 3127**


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பிதழ்



கடந்த 29.03.2022 செவ்வாய்க்கிழமை
இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் திரு. கனகரட்ணம் கனிஸ்ரன்

பிறப்போடு இறப்பு இணைந்தது எனினும் – உங்களின்
இழப்பை நெஞ்சம் ஏற்க மறுக்கின்றது
கல்வி முடிந்த பின் காதோரம் காதல் கதை பேசியவன்
பூக்கள் கொடுத்து பூட்டி வைக்காமல் புத்தகம் கொடுத்து
சிறகை விரிக்கச் சொன்னவன் தன் கருத்தை என் கருத்தாய்
அடையாளப்படுத்தி கருத்து சுதந்திரம் பறிக்காதவன்
காலம் மனப்புண்ணை ஆற்றும் என்பது காலம் கடந்த பொய்யாச்சு
உங்கள் நினைவுதனை நெஞ்சில் சுமந்து கொண்டு
ஊருக்கு ஓரத்தில் உறவுக்கு மத்தியில் சிறகொடிந்த பறவையாய்
சிந்திய விழியோடு வாழ்கிறேன் என் தெய்வம்
பருத்துறையான் என்று சொல்வதில் எனக்கு பெருமையடா
அழகில், அறிவில் என் தெய்வம் எனக்கு பொக்கிஷமடா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்

பிறப்பு 31.01.1982

இறப்பு 29.03.2022

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை11.00 மணியளவில் **"அன்னாரின் இல்லத்தில்"** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (14934)

இல.37/19 பாரதி வீதி,
நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மனைவி கனிஸ்ரன் பிரியங்கா


# நாகபூஷணி திருமண சேவை

## மணமகள் தேவை

1. 1982 செவ்வாய் 8 சித்திரை 3 பொறியியலாளருக்கும்
2. 1985 செவ். இல்லை, அனுஷம் பொறியியலாளருக்கும்
3. 1994 செவ். இல்லை சுவாதி பொறியியலாளருக்கும்
4. 1994 செவ். இல்லை. பரணி பொறியியலாளருக்கும்
5. 1993 செவ். இல்லை. புனர்பூசம் - 3 வைத்தியருக்கும்
6. 1992 செவ். இல்லை. உத்தரட்டாதி வைத்தியருக்கும்
7. 1992 செவ். இல்லை. பரணி வைத்தியருக்கும்
8. 1995 செவ். 8. கார்த்திகை 2 USA பொறியியலாளருக்கும்
9. 1992 செவ். இல்லை. அனுஷம் France (PR) மணமகனுக்கும்
10. 1986 செவ். 2 அனுஷம் Canada (PR) மணமகனுக்கும்

மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகிறது. (C-5650)

பல்லாயிரக்கணக்கான வரன்கள் எம்மிடம் உள்ளன. மிகப்பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்

இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 077 138 7596, 071 999 9306



"Ammanai Saran Adainthal Athika Varamperalam"

## SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 CHAPEL ROAD, London w13 9AE, Phone: 0208 810 0835

www.ammanealing.org Founded: 10.08.1991 Charity No.1014409 Email:info@ammanealing.org






Following jobs are available at the Temple

மேல் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். REF:SKTAT/03/02/2023

**பணிநிலை 1: மகோற்சவ சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)**
**தகமைகள்:** "விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில மகோற்சவக் குருக்களாக பூசைகள் செய்தல்

**பணிநிலை 2: ஆலய சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role & Minsitrey of religion)**
**தகமைகள்:** விண்ணப்பதாரி ஆலயக் குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

**பணிநிலை 3: நாதஸ்வர தவில் கலைஞர்கள் (Hindu religious mucision workers)**
**தகமைகள்:** சிறு பராயம் முதல் கலை பயின்றதுடன் தொடாந்து 10 ஆண்டுகள் பணியாற்றி இருத்தல் வேண்டும்.
**கடமைகள்:**ஆலய பூசைகளில் மங்கள இசை இசைத்தல்.

**பணிநிலை 4 : ஆலய சிவாச்சாரியுார் நெய்வேத்தியம் செய்பவர் (Making Pirasatham - Food) Hindu religious worker non-pastoral role**
**தகமைகள்:** ஆலய சிவாச்சாரியராக மடப்பள்ளியில் 5 வருடங்களுக்குக் குறையாமல் எல்லா வகையான நெய்வேத்தியங்களும் செய்தவராக இருத்தல் வேண்டும்
**கடமைகள்:** ஆலய நெய்வேத்தியம் செய்தல் வேண்டும்.

**பணிநிலை 5: ஆலய சுவாமிகளுக்கு பூமாலை கட்டுதல் சுவாமிகள் அலங்காரம் செய்தல் (Making Garlands & Decoration) Hindu Religious worker Non-pastoral role**
**தகமைகள்:** ஆலய பூமாலை கட்டுனராகவும் சுவாமிகள் அலங்காரம் செய்பவராகவும் 5 வருடங்களுக்க குறையாமல் பணியாற்றி இருத்தல் வேண்டும்.
**கடமைகள்:** ஆலய பூமாலை கட்டுதல் சுவாமிகள் அலங்காரம் செய்தல்.

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் திறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்யப்படும்."
விண்ணப்ப முடிவு திகதி: 18.04.2023 (18 April 2023) (14916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நிச்சயம் நடக்கும்

# தேர்தல் பணிகளை முன்னெடுங்கள்

## பசில் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிச்சயம் இடம்பெறும். ஆகவே தேர்தல் பணிகளை முன்னெடுங்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், நகர மேயர்கள் ஆகியோருக்கும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெற உள்ளமை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இழுபறி நிலை, கட்சி என்ற ரீதியில் தேர்தல் பணிகள் முன்னெடுக்கப்படாமல் உள்ளமை தொடர்பில் பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இதன் போது அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களில் சிறந்த சேவையாற்றியுள்ளோம், தேர்தல் பணிகளை ஆரம்பிக்காமல் இருப்பதால் எதிர்க்கட்சிகள் மக்கள் மத்தியில் தவறான சித்தரிப்புக்களை மேற்கொண்டுள்ளதாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பசில் ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

வெற்றியோ, தோல்வியோ தேர்தலை நடத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாகாண சபை தேர்தலை போல் உள்ளூராட்சிமன்ற சபைத் தேர்தலையும் பிற்போட இடமளிக்க முடியாது. தேர்தலை பிற்போடும் கொள்கை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது எனவும் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துரைத்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை ஆணைக்குழு வெளியிட்டதை தொடர்ந்து கட்சி என்ற ரீதியில் அனைத்து நடவடிக்கைகளையும் முறையாக முன்னெடுத்தோம்.

தேர்தல் குறித்து கட்சி என்ற ரீதியில் எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாது. ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.



தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வு எட்டப்படவில்லை, ஆகவே உறுதியான ஒரு தீர்மானத்துக்காக நீதிமன்றத்தை நாட தீர்மானித்துள்ளோம் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த பசில் ராஜபக்ஷ,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிச்சயம் இடம்பெறும். ஆகவே தேர்தல் பணிகளை தொடருங்கள். உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும் என எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார். (4)

# லிஸ்டீரியா நோய் தொடர்பில் அச்சமடைய வேண்டாம்

## சுகாதார தரப்பு

(கொழும்பு)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்கு சென்ற பெண் ஒருவர் லிஸ்டீரியா" என்ற நோய் தாக்கத்திற்கு உள்ளாகி உயிரிழந்துள்ளமை இலங்கை மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இம்மாதத்தின் முதல் வாரத்தில் சிவனொளி பாதமலை யாத்திரைக்கு சென்றவர்களுக்கு வாந்தி, தலைவலி, காய்ச்சல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சிவனொளிபாதமலையை அண்மித்த நல்லதண்ணி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள சிற்றுண்டிசாலைகளின் உணவுகளின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இரத்தினபுரி மாவட்டத்தில் "லிஸ்டீரியா" என்ற நோய் பரவக்கூடிய அபாயம் இல்லை எனவும் மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஸ்ரீனி அழகப்பெரும தெரிவித்துள்ளார். (4)

# நாடு மீள வேண்டுமானால் திருடர்கள் ஒழிய வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் எனில் திருட்டுகள் நிறுத்தப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



பத்தரமுல்லையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலேயே ஊழல் அங்கீகரிக்கப்பட்டு திருடர்களின் தேசமாக இந்த நாடு மாறியது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஊழலில் ஈடுபடும் ஒரு தோல்வியடைந்த நாடு இலங்கை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர்கள் செய்யும் திருட்டுக்கள் பிடிபாதவரை அவை தொடரும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். (4)

# யாழில் 6,500 குடும்பங்களுக்கு உணவுப் பஞ்ச நிலைமை

## அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 500 குடும்பங்கள் உணவுப் பஞ்ச நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த குடும்பங்களுக்கு அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களில் விசேட வேலைத் திட்டத்தின் மூலம் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், யாழ். மாவட்டத்தில் கட்டுப்பாட்டு விலையில் நெல் விற்பனை செய்ய விரும்புவோர் தமது பிரதேச செயலர் ஊடாக விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தில் அரசாங்கத்தினால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசியினை பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டத்திற்கமைய, யாழ் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்து அரிசியாக்கி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கையின் ஆட்சியாளர்கள் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்க வேண்டும்

## இங்கிலாந்தின் சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

இலங்கையின் ஆட்சியாளர்கள் நீதித்துறையின் சுயாதீன தன்மையை மதிக்க வேண்டும் என இங்கிலாந்து வேல்சின் சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்கான நிதியை வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து நீதிபதிகள் பாராளுமன்ற குழுவின் முன்னிலையில் ஆஜராக வேண்டும் என வேண்டுகோள் வெளியாகியுள்ள நிலையிலேயே இங்கிலாந்தின் சட்டத்தரணிகள் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கையின் உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தல் 2023 மார்ச் 19 ஆம் திகதி இடம்பெற்றிருக்க வேண்டும் இலங்கைப் பாராளுமன்றம் பாராளுமன்றத்தின் மூலம் நிதியை தேர்தலிற்காக ஒதுக்கீடு செய்தது. ஆனால் தேர்தல் ஆணைக்குழு நிதிக்காக வேண்டுகோள் விடுத்த போதிலும் அவை மறுக்கப்பட்டுள்ளன என இங்கிலாந்தின் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

2023 மார்ச் 3 ஆம் திகதி மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு திறைசேரி செயலாளருக்கு வழங்கிய இடைக்கால உத்தரவில் உள்ளூராட்சி தேர்தலிற்கான நிதியை வழங்குவதை நிறுத்தக்கூடாது என உத்தரவிட்டிருந்தது.

இதனை தொடர்ந்து மூன்று நீதிபதிகளின் நடவடிக்கையை பாராளுமன்றத்தின் ஒழுக்காற்று சிறப்புரிமை குழுவிடம் பாரப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை பாராளுமன்ற சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் நீதித்துறை செயற்பாடுகளின் தேவையற்ற, பொருத்தமற்ற தலையீடுகள் இருக்கக்கூடாது. நீதித்துறையின் தீர்மானங்களை மாற்ற முடியாது எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது என இங்கிலாந்தின் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லியம்சன்- நிக்கோலஸ் இரட்டை சதம் இலங்கை அணி தடுமாற்றம்!

இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள் ளது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை கிரிக்கெட் அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 26 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. ஆட்டநேர முடிவில், திமுத் கருணாரத்ன 16 ஓட்டங்களுடனும் பிரபாத் ஜயசூரிய 16 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.




நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களு டன் ஒப்பிடுகையில், இல ங்கை கிரிக்கெட் அணி 554 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

வெலிங்டனில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப் போட்டியில், நாணய சுழற்சி யில் வெற்றி பெற்ற இலங்கை அணி, முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதல் இன் னிங்ஸிற்காக துடுப்பெடுத் தாடிய நியூஸிலாந்து அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 580 ஓட்டங்களை பெற்றிருந்தபோது, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண் டது.

இதன்போது அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, கேன் வில்லியம்சன் 215 ஓட்டங்களையும் ஹென்றி நிக்கோல்ஸ் ஆட்டமிழக்காது 200 (முதல் இர ட்டை சதம்) ஓட்டங் களையும் பெற்றுக் கொண்டனர். இலங்கை கிரிக் கெட் அணியின் பந்துவீச்சில், கசுன் ராஜித 2 விக்கெட்டு களை யும் பிரபாத் ஜயசூரிய மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினை யும் வீழ்த்தினர்.

இன்னமும் 8 விக்கெ ட் டுக்கள் வச முள்ள நிலையில், போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி இன்று தொடரவுள்ளது. (4)

# மைதானத்தில் 'நாட்டு நாட்டு' பாடலுக்கு நடனமாடிய கோலி




ஆர்ஆர்ஆர் படத்தில் இடம் பெற்றிருந்த "நாட்டு நாட்டு" பாடல் ஒஸ்கார் விருது வென்றது.

இந்தப் பாடலின் இசைய மைப்பாளர் எம்.எம். கீரவாணி மற்றும் பாடலை எழுதிய பாடலாசிரியர் சந்திரபோஸ் ஆகியோர் ஒஸ்கார் விருதை பெற்றனர்.

இந்நிலையில், அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி பீல்டிங் செய்த போது விராட் கோலி, "நாட்டு நாட்டு" பாடலின் நடன அசைவுகளை போட்டி ருந்தார். ஸ்லிப் ஃபீல்டராக அவர் நின்றபோது இந்தப் பாடலுக்கு நடனமாடி இருந்தார். (4)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் இன்று 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:30 மணிக்கு யா/பெரிய புலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தினால் பயிற்றுநருக்கான தரப் பரீட்சைக்கான விண் ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 30.03.2023 ஆகும்.

எனவே அதற்கான விண்ணப்பத்தினை யாழ். வலைப்பந்தாட்ட சங்கத்தினை தொடர்பு கொண்டு பெற்று கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (4-90)

# றொனால்டோவின் சாதனையை முறியடித்த இளம் வீரர்

மான்செஸ்டர் அணிக்காக 25 கோல்கள் அடித்து றொனால்டோவை முந்தினார் இளம் வீரர் மார்கஸ் ராஷ்ஃபோர்டு.

நேற்று முன்தினம் நடந்த ஐரோப்பிய லீக் தொடர் போட்டியில் ரியல் பெட்டிஸ் மற்றும் மான்செஸ்டர் யுனைடெட் அணி கள் மோதின.

இந்தப் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ரியல் பெட்டிஸ் அணியை வீழ்த்தியது. 25 வயது இளம் வீரர் மார்கஸ் ராஷ்ஃபோர்டு அடித்த கோல் அந்த அணியின் வெற்றி கோலாக அமைந்தது.

மேலும், ஐரோப்பிய லீக் தொடரில் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக மார்கஸ் ராஷ்ஃபோர்ட் அடித்த 25 ஆவது கோல் இதுவாகும். இதன்மூலம் அவர் மான்செஸ்டர் யுனைடெட் அணியின் முன்னாள் வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவை முந்தினார்.

ஐரோப்பாவின் முதல் ஐந்து லீக்களில் எர்லிங் ஹாலண்ட் 39 கோல்களும் கைலியன் எம்பாப்பே 31 கோல்களும் அடித்துள்ளனர். (4)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்புக்காணி
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

(14952)

**076 755 8606 | 076 436 5814**



## அன்புடன் வரவேற்கின்றோம்

யாழ்ப்பாண நண்பர்கள் அமைப்பும் யாழ்.இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடாத்தும்

**இலங்கை வாழ் இந்தியர்களின் 200ஆவது வருட நிறைவு**

| | |
|---|---|
| திகதி: | 19.03.2023 ஞாயிறு |
| இடம்: | ஸ்ரீதுர்க்கா மணி மண்டபம் |
| நேரம்: | 1.30 மணி முதல் பிற்பகல் 7.00 மணிவரை |

வட்டுர் தவில் வித்துவான் தவில் இசைமணி K.N இராமநாதன் புதல்வர்களின் இசைக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து விருந்துபசாரமும் இடம்பெறும்.

கலாநிதி சிதம்பரமோகன்
கே.கோபாலகிருஷ்ணன்
சு.கமலதாஸ்
0776030507

(14954)

செயலாளர் கலாநிதி
கந்தையா சிவராஜா
இரா.நடேசன்வரன்
ச.மனோகரன் (யாழ்.F.M)


## மரண அறிவித்தல்



தெய்வத்திரு.
**இராசையா பழனியப்பா**
(பரமநாதன்)
(Retired co-operative inspector)

தோற்றம் : 27.05.1936
மறைவு : 18.03.2023

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வத்திருமகன் இராசையா பழனியப்பா (பரமநாதன்) அவர்கள் நேற்று (18.03.2023) சனிக்கிழமை அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும் கனகசபை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வரதலக்ஷ்மி அவர்களின் பாசமிகு கணவரும் சுமதி, சுரேஷ், சுணேஷ், வதனி, ரமேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வநாயகம், அகிலா, மதுரா, சுதர்சன், யசோதா ஆகியோரின் மாமனாரும் கோபிகா, கோகுலன், கௌசிகா, சிறிவட்சன், ரிஷி, ராம், சக்தி, சங்கவி, லக்ஷிகா, பிரவிர், வருண், சேயோன் ஆகியோரின் பேரனும் ரியானின் பூட்டனும் காலஞ்சென்ற லீலாவதி, பத்மாவதி, தவமணி, கருணாவதி, இந்திராவதி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பத்மநாதன், பொன்னுத்துரை, காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், மாணிக்கம் மற்றும் பாலசிங்கம் காலஞ் சென்றவர்களான சபாநாயகம், செல்வநாயகம், இராமச்சந்திரன் மற்றும் புவனேஷ்வரி, புஷ்பவதி, வரதராஜா ஆகியோரின் மைத்துனரும் கனகமணி, லீலாவதி, புஸ்பராணி, அருட்செல்வம், நடராசா, பத்மினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.03.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் இல. 51 1/1, கொலிங்வூட் பிளேஸ், கொழும்பு - 06 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் நண்பகல் 12.30 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் -
ப. ரமேஸ்
077 221 3718

(C-6186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு பூர்த்தி வழிபாடு

(யாழ்ப்பாணம்)

தவத்திரு. வ.குமாரசாமி ஐயா வின் ஜீவப்பிரம்ம ஐக்கியம் அடைந்து ஓராண்டு பூர்த்தி வழி பாடுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை உடுவில் கிழக்கு, கடவுள் சந்நிதி ஆத்ம தத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்து ள்ளனர். (4)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்

கடந்த 18.02.2023 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

அமரர். செல்வராசா பாக்கியராணி (சீனா)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 20.03.2023 திங்கட்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். மறுநாள் 21.03.2023 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வருகை தந்த அனைத்து அன்பு உள்ளங்களையும் நேரடியாக சந்திக்க முடியாதுள்ளதால் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிறப்பு 1956.07.07

இறப்பு 2023.02.18

(சி-6177)

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி.

இங்ஙனம், குடும்பத்தினர்.


## தீ விபத்தில்

# தேயிலைத் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசம்

(கொழும்பு)

நுவரெலியா - கந்தப்பளை பார்க் தோட்டத்துக்குட்பட்ட சந்திர காந்திதோட்டப் பிரிவில் பழமை யான தேயிலைத் தொழிற் சாலையொன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் குறித்த தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

பல வருடகாலமாக மூடிய நிலையில் காணப்பட்ட இத் தொழிற்சாலையானது, தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங் கப்பட்டிருந்த நிலையில், பின்னர் பார்க் தோட்ட முகாமைத்துவம் அதனை பொறுப்பேற்றது. அங்கு கழிவுத் தேயிலை அடைக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையிலேயே நேற்று அதிகாலை தொழிற்சாலையில் திடீ ரென தீப்பரவல் ஏற்பட்டு, தீ கொளுந்து விட்டு எரிந்துள்ளது.

கந்தப்பளை பொலிஸார், தோட்ட மக்கள் மற்றும் நுவரெ லியா மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயை அணைக்க முற்பட்ட போதிலும், தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. தீ விபத்து தொடர்பான விசாரணைகளை கந்தப்பளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4)


# மரண அறிவித்தல்

**சின்னையா-நவமணி** (பெரியகிளி)



மலர்வு-1953.12.01 • உதிர்வு-2023.03.16

அரியாலையைப் பிறப்பிட மாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா-நவமணி 2023.03.16 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் இன்று 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை மானாவளை வீதி, கெரடாவில் சாவகச்சேரி யில் உள்ள அன்னாரின் இல் லத்தில் 9 மணியளவில் நடை பெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பத்தி இந்து மயா னத்தில் தகனம் செய்யப் படும்.

(14940)

தகவல் - பிள்ளைகள் ரவீந்திரன் (ரவி),பாஸ்கரன், தனேந்திரன் (ரமேஸ்), அன்பின் மகள் திருமதி. தீபா


# இராசிபலன்

19.03.2023
பங்குனி 05, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பின்னிரவு 4.02 மணிவரை

அவிட்டம் முன்னிரவு - 8.55 மணிவரை
சுபநேரம் -9.18-10.48 மணிவரை
இராகுகாலம்- 4.48-6.18 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்
புனர் பூசம், பூசம்

வள்ளவன்

**மேஷம்:** குடும்பத்தினரின் தேவை யறிந்து பூர்த்தி செய் வீர்கள், ஆற்றல் மிக்க வர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்:** உறவினர்களும் நண்பர் களும் வலிய வந்து உதவுவார்கள், சமுதா யத்தில் உயர்ந்த நிலை க்கு வரத் தோன்றும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னே ற்றம் காண்பீர்கள், விட்டுப்போன உறவு கள் மீண்டும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கடகம்:** வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள், நேசித்த ஒரு வருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, திருடர் பயமுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூ கலம் தரும் சம்ப வங்கள் இடம்பெற லாம்,சிந்தனை ஆற்ற லால் சிறப்படைவீர்கள், நண்பர் களின் சந்திப்பால் பரவசமடை வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், முன்னே ற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,உடல் நலன் சீரா கும், தொலைபேசி வழியில் மகி ழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** கோரிக்கைகள் நிறை வேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புண் ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபரவமுண்டு.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சு க்களில் முன்னேற்றம் காணும் நாள்,உறவினர் நண்பர்களின் சந்திப் புண்டு, வாகன சுக முண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** நீண்ட நாளைய பிண க்குகளில் திசை திரு ப்பம் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப் புண்டு.

**கும்பம்:** மறக்க முடியாத சம்ப வங்கள் நடைபெறும் நாள், விருப்பங்கள் நிறைவேற் கண்ணனை வழிபட வேண்டிய நாள், சான் றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**மீனம்:** உறவினர்களின் அன் புத் தொல்லைக்கு ஆளாக நேரிடலாம், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், அலைச்சல் கள் சற்று அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான துன்பங்களே பகைவர்களை நண்பர்களாக்குகின்றன.

# வெடியரசன் கோட்டை தமிழர்களின் அடையாளம்

## பௌத்த ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு சிறீதரன் எம்.பி கடிதம்

(யாழ்ப்பாணம்)

**நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த தாதுகோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்காக தொல்பொருளியல் திணைக்களத்தினால் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முனைப்புகளை தடுத்து நிறுத்துமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**



தொல்பொருள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கில் நடைபெறும் பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டி கடந்த 16 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை, நிலாவரை, நாவற்குழி, மயிலிட்டி, மண்ணித்தலை, உருத்திரபுரம், கச்சதீவு, கன்னியா வெந்நீரூற்று என நீளும் இவ் ஆக்கிரமிப்புப் பட்டியல் தற்போது நெடுந்தீவின் வெடியரசன் கோட்டை வரை தனது ஆக்கிரமிப்பின் கால்களை ஆழப் பதித்துள்ளமை, இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் இயல்பு வாழ்வு குறித்த அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பௌத்தம் என்பது ஓர் மத அடையாளமே அன்றி சிங்கள இனத்துக்கான அடையாளம் அல்ல என்பதை அடியோடு மறுத்து தமிழினத்தின் மீது கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுப் படுகொலையை நிகழ்த்துவதென்பது, இந்த் நாட்டின் ஆட்சியாளரான தங்களின் தாராளவாதம் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை "துறவிமடம்" என்னும் பெயரிலான தொல்லியல் ஒதுக்கிடமாக வெளிப்படுத்தி 2020.11.26 ஆம் திகதிய 2203/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டமை பற்றி துறைசார் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவிற்கு 2020.12.18 ஆம் திகதி நான் எழுத்து மூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தும் அது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

எனவே ,இந்த நாட்டின் சுதேசிய இனமான தமிழ்த்தேசிய இனத்தின் தொன்மை மிகு அடை யாளங்களை சிதைத்தழித்து, தொல்பொருள் என்ற போர்வையில் அவற்றை சிங்கள, பௌத்த அடையாளங்களாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும் நெடுந்தீவு விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை தொடர்ந்தும் தமிழர்களின் பாரம்பரிய அடையாளமாக, பேணிப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, மக்களின் கோரிக்கையாக இதனைத் தங்களுக்கு முன்னளிப்புச் செய்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-316)

## துவிச்சக்கரவண்டி விழிப்புணர்வுப் பேரணி



(கரணவாய்)

கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் துவிச்சக்கரவண்டி விழிப்புணர்வு பேரணி நேற்று சனிக்கிழமை காலை இடம் பெற்றது.

ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப எம்மோடு இணைவீர்கள் எனும் தொனிப் பொருளில் மன இறுக்கத்தில் இருந்து விடுபெற மைதானம் நோக்கி விரைவோம், நீரிழிவிலிருந்து விடுபெற துவிச்சக்கரவண்டியில் விரைவோம் எனும் சிந்தனையில் விழிப்புணர்வு பேரணி மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி சாமியன் அரசடிச் சந்தி- கலிகைச் சந்தி- மந்திகைச்சந்தி- நெல்லியடி-விக்னேஸ்வரா வீதி ஊடாக மைதானத்தில் நிறைவடைந்தது. (4-60)

## சங்கிலியன் மன்ற ஆண்டு விழாவும் சங்கிலிய மன்னன் சிலை திறப்பும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் சங்கிலிய மன்னன் சிலை திறப்பு விழாவும் 78 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சங்கிலியன் அரங்கில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் மருத்துவர் டபிள்யூ. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ. இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகன், யாழ். மாநகர ஆணையாளர் ரி. ஜெயசீலன், தொழிலதிபர் இ. எஸ். பேரம்பலம், நல்லூர் பிரதேச செயலர் திருமதி. அன்ரன் யோகநாயகம், மன்றக் காப்பாளர்களான அ. இராஜரட்ணம், பி. ரஜீவன் ஆகியோர் பங்கேற்பர். (4)

## வலி. கிழக்கு பிரதேச சபையினால் 3 ஸ்மாட் முன்பள்ளிகள் ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால்நேரடியாக முகாமை செய்யப்படும் மூன்று முன்பள்ளிகளும் ஸ்மாட் முன்பள்ளிகளாக எதிர்வரும் வாரம் முதல் இயங்கும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

முன்பள்ளிகளை வலுப்படுத்தும் சபையின் செயற்றிட்டத்திற்கு அமைய சபை நிதி மூலம் 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மூன்று ஸ்மாட் போட்கள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவை பிரதேச சபையின் நேரடி முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் ஆவரங்கால் அரிச் சுவடி முன்பள்ளி , இருபாலை சிகரம் முன்பள்ளி, அச்சுவேலி கஜமுகன் முன்பள்ளிகளுக்கு பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (4)

## சவேந்திர சில்வாவின் வருகையை கண்டித்து நாவற்குழியில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

நாவற்குழிபகுதியில்அமைக்கப்பட்ட விகாரை திறப்பு விழா மற்றும் அதனையொட்டிய முப்படைகளின் பிரதானி சவேந்திர சில்வாவின் வருகை ஆகியவற்றைக் கண்டித்து நேற்று சனிக்கிழமை பிற்பகல் நாவற்குழிப் பிரதேசத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாவற்குழி ஸ்ரீ சமித்தீ சுமன விகாரையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழவொன்றிற்கு சவேந்திர சில்வா வருகை தந்திருந்த நிலையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"போர்க் குற்றவாளி சவேந்திர சில்வா வெளியேறு, நாவற்குழி பௌத்த பூமி அல்ல, சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை நிறுத்து" போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினர் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தனர். (4-30-104)

## வெடிபொருட்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் வெடி பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் வெடி மருந்துகளை மீட்டனர்.(4-33)



கடற்கரையோரத்தை சுத்தப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற சிரமதானப் பணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வடமராட்சி கடற்கரையோரத்தில் இடம்பெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலகம், இராணுவத்தினர் மற்றும் பொது அமைப்புகளினால் இச்சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

(படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
Viber 076 636 3378



# மாணவர்களை இலக்கு வைக்கும் வன்மக் கும்பல்

## சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களா?



> ஒரு இனத்தின் இருப்பை இல்லா தொழிக்க வேண்டும் எனின் அவ் இனத்தின் இளம் பராயத்தினரை சீரழித்தால் போதும் அவ்வினம் அழிந்து தன் சுயத்தை யிழந்து போகும் என்பது வரலாறு.

• அபிமன்யு

வடக்கு மாகாணத்தின் கல்வியை சீரழிக்கும் வகையில் திட்டமிட்ட அட்டவணையின் படி திரைமறைவில் பல நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன எனும் விடயத்தை இவ்விடத்தில் பலமுறை எழுதி விட்டோம் ஆயினும் இதுபற்றி எவரும் கவனம் எடுப்பதாய் தெரியவில்லை.

ஒரு இனத்தின் இருப்பை இல்லா தொழிக்க வேண்டும் எனின் அவ் இனத்தின் இளம் பராயத்தினரை சீரழித்தால் போதும் அவ்வினம் அழிந்து தன் சுயத்தையிழந்து போகும் என்பது வரலாறு. அவ்வாறான தொரு செயற்பாட்டின் வெளிப்பாடே வடக்கில் போதை விதைப்பு.

கல்வியின் உச்சத்தில் இருந்த வடக்கு மாகாணம் இன்று கடை நிலையில் இருப்பதற்கு யார் காரணம் என்பதைத் தேடினால் இதற்கு பதில் கிடைத்துவிடும்.

ஆயினும் அதைத் தேடுவதற்கோ அத்தேடலினூடாக எம் சமூகப் பிறழ்வைத் தடுப்பதற்கோ எவருக்கும் மனம் இல்லை என்பது தான் வேதனை.

அரசியல் தளத்தில் இருப்பவர்களும் சரி, கல்விப் புலத்தில் இருப்பவர்களும் சரி, ஆன்மிகப்புலத்தில் இருப்பவர்களும் சரி இது தொடர்பில் மூச்சு விடாமல் இருப்பதற்குள் இருக்கும் பொருள் என்ன என்பது தான் புரியவில்லை.

போர் என்ற அரக்கன் எம் சமூகத்தில் சூழ்ந்திருந்த வேளையில் கூட எமது கல்வி கோலோச்சியே இருந்தது.

ஆயினும் போர் நிறைவு பெற்றதன் பின்னர் இன்னும் வளர்ச்சியடைய வேண்டிய கல்வி வீழ்ச்சி அடைந்ததற்குள் இருக்கும் உண்மை முகங்களைத் திறந்தால் பல மர்ம முடிச்சுக்கள் அவிழ்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

2009 இறுதி போர் நிறைவுற்றதும் பயங்கரவாதம் அழிக்கப்பட்டதாய் இலங்கை அரசு உலக நாடுகளுக்கு அறிவித்திருந்ததும் நாம் அறிந்த விடயமே.

ஆயினும் இனி வரும் இளம் சமூகத்தை மண்பற்று, தமிழ் பற்றுடன் இருக்க விட்டால் அது மீண்டும் தனிநாட்டுக்கான போர் எழ காரணமாக அமையும் என்ற சிந்தனை கொண்டவர்களால் திணிக்கப்பட்ட ஒன்று தான் இந்த போதை என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

போதையின் உச்சம் சமூகப் பிறழ்வின் தாக்கம். எம் பண்பாடு கலாசாரச் சிதைவு என்பன வடக்கின் கல்வி நிலையை படுகுழியில் தள்ளிவிட்டது என்ற உண்மையை உணர்ந்து செயற்படாமல் இருப்பது எந்த வகையிலும் அறம் அன்று.

நிலை இதுவாக இருக்கையில் மாணவர்களை இலக்குவைத்து பல்வேறு பிறழ்வு நடவடிக்கையினூடே அவர்களின் கல்வி நடவடிக்கைகளை குழப்பி அதனூடே தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் கும்பல் ஒன்று மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவை யாழ்.நகரை அண்டிய பிரபல்யமான பாடசாலைகளில் மிகத் தாராளமாய் நடப்பது தான் பயங்கரமானது.குறித்த கும்பல் யாழ். நகரின் பிரபல்ய பாடசாலைகளை தெரிவு செய்தமை எதற்காக என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் அதன் அர்த்தம் புரியும்.

ஆம், அண்மையில் யாழ். நகரில் மிகப் பிரபல்யமான பாடசாலை மாணவர் ஒருவர் பாடசாலையின் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முற்பட்டிருந்தார்.

எனினும் கடவுளின் சித்தம் குறித்த மாணவன் மாடியில் இருந்து குதிக்கும் போது மின்சார வயரில் சிக்குண்டதால் அவர் உயிர் தப்பினார்.

குறித்த மாணவனை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதில் பயங்கரமான விடயங்கள் வெளி வரத் தொடங்கியுள்ளன.

மாணவர்களை பலவந்தமான போதைத் திணிப்பின் ஊடாக துஷ்பிரயோகம் செய்யும் கும்பல் தொடர்பில் தகவல்கள் வெளியானதுடன் குறித்த செயற்பாடு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நடை பெறுகிறது என்பது தான் பெற்றோர் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இச் சுழ்ச்சி வலையில் சிக்கும் மாணவர்களை வீடியோ எடுத்து தொடர்ந்து மிரட்டிவரும் அக் குழுவின் கோரமுகம் எப்படிப்பட்டது என்பதை நாம் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை.

மாணவர்களை இலக்கு வைத்து செயற்படும் இக் கொடூர கும்பலை உடன் கைது செய்ய வேண்டும்.இது விடயத்தில் யார் யார் தொடர்புடையவர்கள் என்பதை வெளிக் கொணர வேண்டும் என்பதே பெற்றோர்களின் விருப்பம்.

இவ் விடயத்தை சர்வ சாதாரணமாக எடுத்துக் கொண்டால் நிலை மிக மோசமானதாகவே இருக்கும். எனவே உடனடியாக பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல் மாணவர்களின் உயிரிழப்புகளை தடுக்க முடியாது என்பது மட்டும் உண்மை.

ஏனெனில் அவர்கள் குறித்த விடயத்தின் காரணமாக பாரிய மன அழுத்தத்தில் இருப்பதுடன் அவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர முடியாத பயங்கரமான மன இறுக்கத்துடன் வாழ்கின்றனர்.

எம்மையும் எம் கலாசாரத்தையும் சீரழிக்க இளம் மாணவர்களை இலக்கு வைத்துச் செயற்படும் இவ்வாறான கொடூர கும்பலை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இதற்கு எமது புத்திஜீவிகள் , கல்வியியலாளர்கள், மருத்துவர்கள், பொது அமைப்புக்கள் என பலதரப்பட்டவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இல்லையேல் எமது கல்வியையும் இளம் சமூகத்தையும் மீட்டெடுக்க முடியாத துர்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திலிருந்து அந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப்பாடுபட்ட கொக்குவிலைச் சேர்ந்த செல்வநாதன் (நகுலன்) அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். பிரபல பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரன் அவர்கள் காலமாகி விட்டார். பொருளியல் பாடத்தைக் கற்பிப்பதில் மிகுந்த ஆற்றல் கொண்ட வே.கருணாகரன் ஆசிரியர் பொருளியல் துறைசார்ந்த பல புத்தகங்களை எழுதி வெளியிட்டவர்.

சாயி பக்தரான அவரின் மறைவு பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று அறிவிக்க, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மீண்டும் எழுந்த பண்டிதர் பரமலிங்கம், பிரபல கணித ஆசிரியரும் எடிசன் கல்வி நிறுவனத்தின் அதிபருமாகிய B.P.பாஸ்கரன் அவர்கள் காலமாகிய செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம்.


யாழ்ப்பாணத்தில் கணித பாடத்தை திறம்பட கற்பித்து மாணவர்களுக்கு பெரும் பணி புரிந்த அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விஸ்வலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி வாத்தியார், யாழ்ப்பாணம் தபால் கந்தோர் சந்தியில திருவள்ளுவர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த நிகழ்வுக்குப் போனனீங்களோ!

**வாத்தியார்:-** ஓமோம் போனனான். முன்பு யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில தான் திருவள்ளுவர் சிலை இருந்தது. பின்னர் அந்தச் சந்தியில வீதிச் சமிக்ஞை பொருத்தப்பட்டதால அந்த திருவள்ளுவர் சிலை அகற்றப்பட்டிருந்தது.

இருந்தும் இப்ப முற்ற வெளிக்கு அருகில யாழ்ப்பாணத் தபால் கந்தோர் அமைந்துள்ள முச்சந்தியில திருவள்ளுவர் சிலை அமையப்பெற்றிருப்பது உண்மையிலேயே மன ஆறுதலைத் தருகுது.



## சிவாலயங்களைச் சுற்றி வளைக்குது தொல்லியல் திணைக்களம்

**சாத்திரியார்:-** சொன்னாப்போல நானும் அந்தத் திறப்பு விழாவுக்கு வந்தனான். எனக்கெண்டால் வெட்டவெளியில வள்ளுவர் சிலையை வைத்ததுதான் ஒரு மாதிரியா இருக்குது.

**மூப்பர்:-** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** ஒருவருடைய சிலையை வைச்சால் அதனைப் பாதுகாக்கிற பொறுப்பும் எங்களிட்ட இருக்க வேணும்.

உண்மையில மேற்தளக் கூரையுள்ள பீடத்தில வள்ளுவர் சிலையை வைத்தால் தான் மழை, வெயில் என்பவற்றின் தா[illegible] இல்லாமல் இருக்கிற[illegible] காகங்களின் எச்சங்களும் இருக்காது.

இப்ப வள்ளுவர் சிலை அமையப் பெற்ற இடத்தில இருந்து ஒரு கொஞ்ச தூரத்தில தான் கொட்டடி மீன் சந்தை இருக்குது.

அங்க ஒரு மீன் தலையைத் தூக்கி வாற காகம் வள்ளுவரின்ர தலையில இருந்து கொண்டு, மீன் தலையை கொத்தலாம். அதேநேரம் காகங்கள் வள்ளுவரின்ர தலையில குந்தியிருந்து எச்சமும் போடலாம்.

ஆகையால வள்ளுவப் பெருந்தகையின்ர சிலையை வைப்பது மட்டுமல்ல அந்தச் சிலையின்ர மகிமையைப் பாதுகாப்பதும் கட்டாயம்.

**சிறாப்பர்:-** தெரியாமல் தான் கேக்கிறன். வள்ளுவரின்ர சிலைக்கு திருநூற்றுக்குறி வைத்தது பற்றியும் விமர்சனங்கள் போகுதோ.

**விதானையார்:-** இஞ்சே சிறாப்பர். எங்கட மண்ணில எதுக்குத்தான் விமர்சனம் இல்லை. எல்லாத்துக்கும் விமர்சனம் சொல்லுறதில நாங்கள் தான் முதலிடம். என்னைப் பொறுத்தவரை விமர்சனம் சொல்லக் கூடாதெண்டு நான் சொல்லல்ல. ஆனால் விமர்சனங்கள் ஆக்கபூர்வமானதாக இருக்க வேணும்.

**கங்காணி:-** அதுசரி வாத்தியார் வள்ளுவர் சிலை திறப்பு விழாவில எங்கட நல்லை ஆதீன சுவாமிகளை விழா ஏற்பா[illegible] சொல்லுகினம் அது உண்மையா?

**சிறாப்பர்:-** உண்மை தான், மங்கள விளக்கேற்றும் போது நல்லை ஆதீன சுவாமிகளை ஐந்தாவதாகத்தான் அழைத்தினம். அதோட வரவேற்புச் செய்யும் போதும் அவரை முன்னிலைப்படுத்தவில்லை.

**வாத்தியார்:-** இதுதான் நான் அடிக்கடி சொல்லுறது. எங்கட நல்லை ஆதீன சுவாமிகள் ஒரு இடத்துக்குப் பிரசன்னமாகுவதெண்டால், ஆதீன சுவாமியை எப்படி வரவேற்க வேணும். அவருக்குரிய முன்னுரிமை எவ்வாறாக அமையும் எண்ட விதிமுறைகளை முன்கூட்டியே எடுத்துக்கூற வேணும். சம்பந்தப்பட்டவர்கள் அதற்கு உடன்படாவிட்டால் அந்த இடத்துக்குப் போவதைத் தவிர்க்கிறதுதான் ஒரே வழி.

**கங்காணி:-** ஏதோ நல்லதுகள் நடக்கட்டும். எல்லாத்துக்கும் குறைபிடிச்சால் ஒண்டும் நடக்காது.

**விதானையார்:-** கங்காணியார் நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. ஒரு நிகழ்வைச் செய்யும் போது, அது தொடர்பில ஒரு திட்டமிடல் இருக்க வேணும். நல்லை ஆதீனம் என்பது எங்கட சைவசமயத்தின்ர அடையாளம். ஒரு சபையில ஆதீனத்துக்குரிய மரியாதை கொடுக்கப்படவில்லை எண்டால், அது சைவசமயத்தை அவமரியாதைப்படுத்தியதாகத்தான் பொருள்படும்.

ஆகையால நிகழ்வை ஏற்பாடு செய்கிறவர்கள் இந்த மாதிரியான விடயங்களை ஏனோ தானோ எண்டு விட்டுவிடக் கூடாது. விதானையார் விஸ்வலிங்கம் சற்றுக் கோபத்தோடு கூற, ஆலடியை நிசப்தம் ஆட் கொண்டது.

நிலைமையப் புரிந்து கொண்ட வாத்தியார் வைத்திலிங்கம், அதுசரி கீரிமலை ஆதிசிவன் கோவில், சடையம்மா மடம் என்பவற்றை நேரில சென்று பார்வையிடுவதற்குப் படைத் தலைமை அனுமதி வழங்கினதின்ர பேரில, எங்கட செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் நேரில சென்று பார்வையிட்டிருக்கிறார்.

**பண்டிதர்:**ஓம் நானும் அறிஞ்சனான். காங்கேசன் துறையில இருக்கிற ஜனாதிபதி மாளிகையை புலம்பெயர் தமிழர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்க ஜனாதிபதி ரணில் உடன்பட்டிருக்கிறார். அந்த மாளிகையைக் குத்தகைக்கு எடுக்கிறவர்களும் ஆதிசிவன் கோவில், சடையம்மா சமாதி என்பன இருக்கிற இடங்களை அடையாளப்படுத்த வேணும் எண்டும் தேவையில்லாமல் சிவ சொத்துக்குள்ள போகக்கூடாது எண்ட அடிப்படையிலும் அந்த இடத்தைப் போய்ப் பார்த்திருக்கினம். ஏதோ நல்லது நடந்தால் நல்லது.

**விதானையார்:-**இப்ப எங்கள ஆக்கிரமிக்கிறது தொல்லியல் திணைக்களம் தானே. திருக்கேதீச்சரத்தில, திருகோணமலையில, கீரிமலையில எண்டு சிவ ஆலயங்கள் இருக்கிற இடங்களில தொல்லியல் திணைக்களம் வந்து குந்துதல்லோ. இனி ஆதிசிவன் ஆலயத்தைப் புனரமைப்பம் எண்டால், அதற்குத் தொல்லியல் திணைக்களம் இடைஞ்சல் கொடுக்கும்.

**மூப்பர்:-** சரி... சரி... இப்பதானே தொல்லியல் சார்ந்த குழுவில எங்கட வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை அவர்களும் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்களும் இருக்கினம். இவர்கள் இருவரும் நீதி நியாயத்தை தயங்காமல் எடுத்துக்கூற வல்லவர்கள். ஆகையால நல்லது நடக்கும் எண்டு நம்புவம்.

இவ்வாறு மூப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேர்தல் நடத்த பணம் இல்லை எனத் தெரிந்தும் ஏன் தேர்தல் அறிவிப்பை விட்டார்கள் வியாசரே?

**தாவிது — வவுனியா**

**சட்டம் போட்டு போராட்ட காரர்களை அடக்குவது எந்த வகையில் நியாய மானது வியாசரே?**

என்ன செய்வது மனதில் பட்டதைக் கூட கூறமுடியாத நிலையில் தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது வேதனையானது.
உதாரணத்திற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் எனும் சட்டம் தோற்றுவிக்கப்பட்டதே தமிழினத்தை அடக்குவதற்காகவே.
இப்போது அதன் தாக்கத்தை பெரும்பான்மையினத்தவர்கள் உணரும் போது ஆ.... கூ.... எனக் குதிக்கிறார்கள்.
இதுவரை தமிழினம் எப்பாடுபட்டிருக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டால் சரி.

**சிவம் — வதிரி**

**வல்லமை என்பதன் அர்த்தம் என்ன என்பதைக் கூற முடியுமா வியாசரே?**

வல்லமை என்பது ஒரு செயலைச் செய்வதே தவிர மற்றவர்களை அடக்கி ஒடுக்குவதுதான் வல்லமை என எண்ணுவதை நாம் நிறுத்திக் கொள்ளவேண்டும்.
எங்களில் பலர் தமது அதிகாரத்தை மற்றவர் மீது பிரயோகித்து தம்மை உயர்வாயும் மற்றவர்களை இழிவாயும் காட்ட முயலுவர்.
அது ஒரு நாளும் வல்லமை ஆகிடாது என்பதைப் புரிந்து கொண்டால் சரி.
மற்றவர் மனம் கோண ஒருவர் நடந்து கொண்டால் நிச்சயம் அது அவர் பக்கமும் திரும்ப வாய்ப்புண்டு.

**சுதன் — குப்பிழான்**

**ராஜபக்ஷக்களை விரட்டியது போல மற்றவர்களையும் விரட்டலாமா வியாசரே?**

விரட்டலாம் ஆனால் அந்த பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது தான் முக்கியமானது.
ராஜபக்ஷக்களின் ஆட்சியில் அதிருப்தி கொண்ட மக்கள் எழுச்சியை எதுவும் செய்ய முடியது போனது.
ஆனால் இன்று நாட்டு நிலை அப்படியா? இல்லையே யார் அரசுக்கு எதிராக போரிட முயன்றாலும் சட்டத்தைக் கொண்டு அவர்கள் அடக்கப்படுகின்றார்கள்.
பிறகு எப்படி அவ்வாறான தொரு எழுச்சி ஏற்படும் சொல்லுங்கள்.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சங்கரசிவன் — வதிரி**


**நல்லாட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி இப்போது 13ற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறாரே?**

அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா எனும் கவுண்டமணியின் நகைச்சுவைதான் ஞாபகம் வருகிறது.
இதோ தமிழனத்தின் விடிவுக்காலம் பிறக்கிறது என ஆட்சி அமைத்தவர்களால் தமிழினத்திற்கு விடிவல்ல. சிறு துளி வெல்லம் கூட கிடைக்கவில்லை.
வாய்ச் சொல் வீரர்களை நம்பி களத்தில் இறங்கினால் அது புறமுதுகு காட்ட வேண்டிய நினைக்கே தள்ளப்படும் என்பதற்கு நல்லாட்சி ஒரு நல்ல உதாரணமாகிறது.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தமிழினத்தை மீட்கும் மீட்பர் யாராக இருக்கும் வியாசரே?**

மீட்பர் என்பது பிறப்பல்ல அவதாரமாக இருக்க வேண்டும்.
அந்த அவராதரத்தைத் தானே உலக நாடுகள் ஒன்று சேர்ந்து அழித்து விட்டனவே?
இனி அவ்வாறானதொரு அவதார புருஷன் தோன்ற ஆயிரம் வருடங்களாயிலும் ஆகும்.
அதற்குள் தமிழினம் இருந்த இடத்தில் புல்லும் முளைத்துவிடும்.
தமிழினம் பாவப்பட்ட இனம் இந்த பாவப்பட்ட இனத்துக்கு மீட்பரும் இல்லை மீட்சியும் இல்லை என்பதே உண்மையானது.



ராஜபக்ஷக்களை விரட்டியது போல மற்றவர்களையும் விரட்டலாமா வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**நடிகை அஞ்சலிதேவி பற்றிக் கூற முடியுமா வியாசரே?**

அஞ்சனி தேவி எனும் இயற்பெயரைக் கொண்ட அஞ்சலி தேவி ஆந்திராவை பூர்வீகமாகக் கொண்டவர்.
1936 ஆம் ஆண்டு ராஜா ஹரிச்சந்திரா எனும் திரைப்படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான இவர் 350 படங்களுக்கு மேல் நடித்திருந்தார்.
பல திரைப்படங்களில் இவர் நடித்திருந்தாலும் லவகுசா திரைப்படத்தில் சீதையாக நடித்தது இன்றுவரை அவரை சீதையாகவே ரசிகர்கள் பார்கிறார்கள்.
1927இல் பிறந்த இவர் 2014 தனது 86 ஆவது அகவையில் இயற்கை எய்தினார்.

**திகான் — வடமராட்சி**

**ஆரோக்கியமான தலைமுறை ஒரு இனத்தின் வரமா வியாசரே?**

ஒரு இனம் தனது பண்பாடு கலாசாரத்தை கட்டிக் காப்பதற்கு அந்த இனத்தின் ஆரோக்கியம் மிக முக்கியமானது.
எமது கலாசாரத்துக்குள் பிற கலாசாரங்களைச் செருகுவதற்கோ, இணைப்பதற்கோ நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.
அவ்வாறு அனுதிப்போமாக இருந்தால் நாம் எமது எதிர்காலச் சந்ததிக்கு செய்யும் துரோகம் என்றே கூறலாம்.
தமிழினத்தின் இருப்பை இல்லாதொழிக்க பெரும்பான்மையினரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றியடைகின்றன என்பதுதான் வேதனை.

**மீதுவன் — வடமராட்சி**

**தேர்தல் நடத்த பணம் இல்லை எனத் தெரிந்தும் ஏன் தேர்தல் அறிவிப்பை விட்டார்கள் வியாசரே?**

என்ன செய்வது யார் என்ன செய்ய வேண்டும் யார் என்ன சொல்ல வேண்டும் என்பது கூடத் தெரியாதவர்கள் இருந்தால் இவ்வாறு நடக்காமல் என்ன ஆகும்.
பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் இங்கு 'பானையே இல்லை அகப்பையை விட்டுக் கிளறினால் சோறு வராது மக்களுக்கு சோகமே வரும்.
இந்த நிலை மாற வேண்டும் என்பதே மிக முக்கியமானது.
இன்னும் தேர்தல் நடக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வின்



சிறு வயதில் ஒரு விமானம் பறக்கும் சத்தம் கேட்டவுடனேயே ஓடிவந்து அதற்கு கையசைத்த ஞாபகம் உங்களுக்கு இருக்கக் கூடும். அவ்வாறு கையசைக்கும் போது என்றாவது அவ்வாறானதொரு விமானத்தில் ஏறி வெளிநாட்டிற்கு பயணிக்க வேண்டும் என நீங்கள் கனவு கண்டிருக்கக்கூடும். அவ்வாறு கனவுலகில் தொடங்கிய உங்களது எண்ணத்தின் காரணமாக வெளிநாட்டிற்கு புலம்பெயர்வதற்கான எதிர்பார்ப்பில் நீங்கள் இருப்பீர்களாயின் இக்கட்டுரைத் தொடர் உங்களுக்கானதே.

தேச எல்லைகள் ஊடாக இடம்பெறும் புலம்பெயர்வானது தொழிலுக்காக, கல்விக்காக, சுற்றுலாவுக்காக, சுகாதார வசதிகளுக்காக, நிரந்தரமாக குடியேறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம் பெறக்கூடும். இக்கட்டுரைத் தொடரின் ஊடாக நாம் எதிர்பார்ப்பது யாதெனில், தொழிலுக்காக புலம்பெயர்பவர்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை வழங்குவதாகும். மேலும், இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் அனைத்து புலம்பெயர்பவர்களுக்கும் பொதுவானதாக இருப்பதால் நீங்களும் இக்கட்டுரைத் தொடரை வாசித்து முறையான புலம்பெயர்வு தொடர்பாக அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கம் அளிப்பதற்கு வசதியாக நாம் புலம்பெயர்வினை 3 பகுதிகளாக பிரித்துக் கொள்வோம்

1. புலம்பெயர்வதற்கு முன்னர்
2. புலம்பெயர்வின் போது
3. புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னர்

## புலம்பெயர்வதற்கு முன்னர்

தொழிலுக்காக புலம்பெயர்வதற்கு முன்னர் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சில விடயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு.

### 1. நீங்கள் ஒரு தொழிலை பெற்றுக்கொள்வதற்கு நாடுகின்ற வெளிநாட்டு முகவர் / நிறுவனம் சட்டரீதியாக பதிவுசெய்து கொண்டுள்ள நிறுவனமா?

தொழில் நிமித்தமான உங்கள் புலம்பெயர்வு செயன்முறைக்கு உதவி செய்வதற்கு நீங்கள் சரியான வெளிநாட்டு தொழில் முகவர் ஒருவரை தெரிவு செய்துள்ளீர்களா என்பதை நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்வீர்கள்?

நீங்கள் இந்நாட்டில் பதிவு செய்து கொண்டுள்ள ஒரு தொழில் முகவர் ஊடாக தொழிலை பெற்றுக்கொள்வீர்களாயின் அத்தகைய, முகவர் கட்டாயமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவினை கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்துகொண்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் முறைகளை பின்பற்றுதல் வேண்டும

(1.) (1) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளத்திற்கு (www.slbfe.lk) பிரவேசியுங்கள். அதில Recruitment Agencies எனும் பகுதிக்கு செல்லுங்கள்.

பின்வரும் படத்திற்கு அமைவாக அப்பக்கத்தின் இடது புறத்தில் உள்ள பகுதியிலிருந்து அகர வரிசையில் உள்ள எழுத்துக்களை தெரிவு செய்வதன் ஊடாக அவ்வெழுத்தில் தொடங்கும் அனைத்து முகவர்களையும் முறையே அறிந்துகொள்ள முடியும் என்பதுடன் வலது புறத்தில் உள்ள பெட்டியில் குறிப்பிடப்படும் எந்தவொரு தகவலையும் நிரப்புவதன் மூலம் அத்தகவலுடன் தொடர்புடைய முகவர் நிலையத்தின் தகவல்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளமுடியும்.




(2) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 1989 உடனடி தொலைபேசி இலக்கத்தின் வழியாக அல்லது 24 மணித்தியால தகவல் நிலையத்தின் 011-2880500 தொலைபேசி இலக்கத்தின் வழியாக தொடர்பு கொள்வதன் மூலம், அல்லது

(3) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தமது பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ், **வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் / நிறுவனம்** தமது அலுவலகத்தில் காட்சிப்படுத்த வேண்டும் என்பதால் அத்தகைய சான்றிதழின் செல்லுபடியாகும் காலத்தை ஆராய்வதன் மூலம் நீங்கள் தெரிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரின் பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் முறையற்ற மற்றும் நெறிமுறையற்ற நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுவதால் இப்பதிவு முக்கியமானதாகும்.

### 2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் பதிவு செய்து கொள்வதும் அத்தகைய பதிவும் ஏன் முக்கியமானது?

இலங்கையிலிருந்து தொழிலுக்காக ஒரு வருடத்திற்கு சுமார் 200,000 பேர் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். ஆயினும் கடந்த 2022 ஆம் ஆண்டில் பணியகத்தில் பதிவு செய்துகொண்டு வெளிநாட்டிற்கு சென்ற இலங்கையின் புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை 311,095 ஆகும். இது பணியக வரலாற்றில் ஒரு வருடத்திற்குள் பதிவு செய்து கொண்டு வெளிநாட்டிற்கு சென்ற ஆகக்கூடிய எண்ணிக்கையாகும். இவ்வாறு வெளிநாட்டிற்கு செல்லும் இலங்கையர்களிடமிருந்து இவ்வாறு புலம்பெயர்பவர்களிடமிருந்து இலங்கைக்கு கணிசமானளவு பணத் தொகை அனுப்பி வைக்கப்படுவதுடன் அவ்வாறு அனுப்பப்படுகின்ற பணத்தொகை இலங்கை அரசின் அந்நியச் செலாவணிக்கு நேரடியாகவே பங்களிப்பு வழங்குகின்றது.

அரச பொருளாதாரத்தின் அந்நியச் செலாவணி பங்களிப்பு வழங்குவதற்கு மேலதிகமாக மேற்படி வெளிநாட்டு பணத்தின் ஊடாக இந்நாட்டில் வசிக்கும் புலம்பெயர்ந்தோரின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரமும் முன்னேற்றம் அடைகின்றது.

புலம்பெயர்ந்தோரிடமிருந்து இவ்வாறு கிடைக்கும் பல்வேறு சேவைகளை போலவே, புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்புக்காகவும் இலங்கை அரசாங்கம் ஒரு தேசியக் கொள்கையை தயாரித்துள்ளது. இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சார்ந்த ஒழுங்குறுத்தல் அதிகாரமுடைய நிறுவனமாக செயற்படுவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நிறுவப்பட்டுள்ளதுடன் அப்பணியகத்தின் பிரதான பணிகள் பின்வருமாறு:



- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை ஒழுங்குபடுத்துதல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்ப்பு செய்யும் முகவர் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் (உரிமம் வழங்குதல் உள்ளிட்டவை)
- வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்லும் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு பயிற்சி மற்றும் ஆற்றுப்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- புலம்பெயர்ந்தோரினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலன்புரி மற்றும் நல்வாழ்வு தொடர்பாக ஆராய்ந்தறிதல்
- வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு ஊடாக இலங்கையர்களுக்கு மிகச்சிறந்த வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்தல்
- ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அதிகாரிகள், தொழில் தருணர்கள் மற்றும் தொழில் முகவர் நிலையங்களுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல்
- இலங்கைக்கு வெளியில் வேலை செய்துவிட்டுஇலங்கைக்கு திரும்பிவரும்இலங்கையர்கள் மீண்டும் வெளிநாடு செல்லாத பட்சத்தில் அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு சுயதொழில் வழிவகைகளை ஊக்குவித்தல் அல்லது மீள் ஒருங்கிணைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்கின்ற அனைத்துப் புலம்பெயர் ஊழியர்களும் புலம்பெயர்வதற்கு முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

### 3. அதற்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்வதற்கு ரூ.17,928.00 செலுத்துதல் வேண்டும்.

பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பதிவுக்காக செலுத்தப்படும் பணத்தொகை மறைமுகமாகவும் நேரடியாகவும் புலம்பெயர் ஊழியர்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கு ஈடுபடுத்தப்படும் பணத் தொகையாகும். பதிவினைப் பெற்றுக்கொண்ட ஒருவருக்கு ஏதேனும் நலன் கிடைக்காவிடினும் இவ்வாறானவர்கள் செலுத்தும் பதிவுக் கட்டணத்தைக் கொண்டு கற்பனை செய்ய முடியாத அளவிற்கு பெருந்தொகையான செலவுகள் புலம்பெயர் ஊழியர்களுக்காக பணியகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விடயத்திற்கு அனைத்து பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்ந்தோரும் பங்களிப்பு வழங்கியுள்ளார்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.


இப்பதிவின் செல்லுபடியாகும் காலம் 2 அல்லது 3 வருடங்களாகும். சம்பந்தப்பட்ட காலம் நிறைவடைந்து காலாவதியாவதற்கு முன்னர் ரூ.3,774.00 கட்டணம் செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக் கொள்வது அவசியமாகும்.



அனேகமான புலம்பெயர்ந்தோர் தங்களது புலம்பெயர் காலத்தை நிறைவு செய்த பின்னரும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்களை பெற்றுக்கொள்ள முடியாமல் அல்லல்படுவதற்கு காரணம் இவ்வாறு பதிவினை புதுப்பித்துக் கொள்ளாமையாகும். இப்பதிவினை புதுப்பித்துக் கொள்ளும் விடயத்தை நீங்கள் சென்றடையும் நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக செய்து கொள்ள முடியும். இல்லையெனில் உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அல்லது மாவட்ட அலுவலகத்திற்கு வருகை தருவதன் ஊடாக செய்து கொள்ள முடியும்.

மேற்படி கட்டணத்தை செலுத்தி பதிவு செய்து கொள்வதன் ஊடாக புலம்பெயர் ஊழியர்களாகிய உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

- சுகாதார பிரச்சினைகள் / அவசர விபத்துக்களுக்கான காப்புறுதி கிடைத்தல்
- உங்கள் தொழில் ஒப்பந்தத்தை ஆராய்தல்
- வெளிநாடுகளில் ஏற்படக்கூடிய தொழில் பிணக்குகள் மற்றும் அவசர சந்தர்ப்பங்களின் போது உதவி வழங்குதல்
- செல்வதற்கு எதிர்பார்க்கும் வெளிநாட்டிற்கு பொருத்தமான வகையில் ஊழியர்களை தயார்படுத்துதல்
- சில வெளிநாட்டு தொழில்களுக்கான பயிற்சியினை வழங்குதல்
- வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லுதல் தொடர்பான சரியான தகவல்களை நம்பகமான மூலங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டுதல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் புலம்பெயர் ஊழியரின் வெளிநாட்டு கடவுச்சீட்டில் முத்திரையிட்டு முறையான புலம்பெயர்பவர் என்பதை உறுதிப்படுத்துதல்
- ஆட்கடத்தலுக்கு உள்ளாவதற்கான வாய்ப்புகளை தவிர்ப்பதற்குஆவன செய்தல்



## புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (**International Organization for Migration**) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப் பிரிவினால் பேணி வரப்படும் 077-4410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி நபர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

இன்றைய கட்டுரை கட்டாயமாக உங்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும் என நம்புகின்றோம். இது போன்ற மற்றுமொரு கட்டுரை மார்ச் மாதம் 20 ஆம் திகதி பிரசுரமாக இருப்பதோடு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் உங்களுக்கு அதுதொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள அந்த கட்டுரையையும் வாசித்தல் பயனுடையதாக இருக்கக்கூடும். கீழேயுள்ள கட்டத்தினுள் கேட்கப்பட்டிருக்கும் வினாவுக்கான விடையை SMS முறையில் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சீட்டிழுப்பு முறையில் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி முற்கட்டண (ரீலோட்) அட்டைகளை வெற்றி பெற முடியும். தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

வெளிநாட்டிற்கு செல்லுதல் தொடர்பாக அல்லது ஒழுங்கற்ற பயணத்தின் ஊடாக இன்னலுக்கு உள்ளாகியுள்ள நபர்கள் தொடர்பான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0774410086 தொலைபேசி இலக்கம் வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலம் ஒரு சிறந்த எதிர்காலம்





ගොඩ යන්න, හරි පාරෙන් රට යන්න
சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி

### 4. நீங்கள் தொழிலுக்குச் செல்வதற்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டிய பயிற்சிகள் யாவை?

தொழிலுக்காக வெளிநாடு செல்கின்ற புலம்பெயர் ஊழியர்களின் பயிற்சி மட்டத்தை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கையின் மனித வளங்களுக்கு உயர்ந்த கிராக்கியும் பெறுமதியும் கிடைப்பதற்கு வழிசமைத்தல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் குறிக்கோளாகும்.

ஆகவே, சிற்சில தொழில் வகைகளுக்கு வெளிநாடு செல்லுகின்ற ஊழியர்களுக்கான பயிற்சி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்தகைய கட்டாய பயிற்சிகள் பின்வருமாறு.

| பாடநெறி | காலம் | வயது (ஆண்டுகள்) | யாருக்காக? | பாடநெறி பயிற்சிக் கட்டணம் (ரு) | NVQ பரீட்சைக் கட்டணம்(ரு) | மொத்தக் கட்டணம் (ரு) | பயிற்சி நிலையங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| வீட்டுப் பராமரிப்பு உதவியாளர் - மத்திய கிழக்கு நாடுகள் **(NVQ Level - 03)** | வதிவிட 28 நாட்கள | 18 - 55 | வீட்டு பராமரிப்பாளராக அல்லது நோயாளர் பராமரிப்பாளராக மத்திய கிழக்கு நாடுகளுக்கு முதல்முறையாக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களுக்கு | 22,410.00 | 2,500.00 | 24,910.00 | தம்புள்ள புலம்பெயர்வு வள நிலையம்<br>தங்காலை புலம்பெயர்வு வள நிலையம்<br>பன்னிபிட்டிய பயிற்சி நிலையம்<br>இரத்தினபுரி புலம்பெயர்வு வள நிலையம்<br>கண்டி பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>ஊவா மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - ஹாலிஎல<br>மத்துகம புலம்பெயர்வு வள நிலையம்<br>பொலன்னறுவை பயிற்சி நிலையம் |
| வீட்டுப் பராமரிப்பு உதவியாளர் - ஐரோப்பிய மற்றும் கிழக்காசிய நாடுகள் **(NVQ Level - 03)** | வதிவிட 28 நாட்கள் | 21 - 45 | வீட்டு பராமரிப்பாளராக ஐரோப்பிய நாடுகளுக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் முதல்முறையாக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களுக்கு | 22,410.00 | 2,500.00 | 24,910.00 | மத்துகம புலம்பெயர்வு வள நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம் |
| நோயாளர் பராமரிப்பாளர், பெண்கள் / ஆண்களுக்கான பயிற்சி பாடநெறி **(NVQ Level - 03)** | வதிவிட 45 நாட்கள் | 18 வயதுக்கும் மேற்பட்ட | முதல் முறையாக நோயாளர் பராமரிப்பாளராக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களுக்கு / ஆண்களுக்கு | 18,792.00 | 3,250.00 | 22,042.00 | இரத்தினபுரி புலம்பெயர்வு வள நிலையம்<br>தங்காலை புலம்பெயர்வு வள நிலையம்<br>ஊவா புலம்பெயர்வு வள நிலையம் - ஹாலிஎல<br>பன்னிபிட்டிய பயிற்சி நிலையம்<br>(பெண்களுக்கு மாத்திரம்) |
| IFE ஊழியர் பயிற்சிப் பாடநெறி **(IFE) Identification of Foreign Experience/** வெளிநாட்டு அனுபவங்களை அறிந்துகொள்ளுதல்) 07 நாட்கள் | வதிவிட 7 நாட்கள | 18 - 45 சவுதி அரேபியா 25 - 55 | தங்களது பயிற்சிநெறிகளை நிறைவுசெய்து, பாடநெறியின் செல்லுபடித்தன்மை கடந்துள்ள புலம்பெயர்வதற்கு இயலாமல் போனவர்களுக்கு அல்லதுர் வெளிநாட்டு அனுபவத்துடன் கூடிய ஆயினும் அதனை உறுதிசெய்ய இயலாதவர்களுக்கு | 9,719.00 | - | 9,719.00 | மேல் மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - மத்துகம<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம் |
| எழுத்தறிவு பயிற்சிப் பாடநெறிகள் (சிங்களம் / தமிழ்) | வதிவிட 18 நாட்கள | 23 - 55 | சிங்களம்/தமிழ் மொழிகளைப் எழுதுவதற்கோ வாசிப்பதற்கோ தெரியாதவர்களுக்கு | 3,001.00 | - | 3,001.00 | சப்ரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி |
| அடிப்படை ஆங்கில மொழிப் பாடநெறி | 14 நாட்கள் | 18 - 55 | தமது ஆங்கில அறிவை விருத்தியாக்கிக்கொள்ள விரும்புபவர்கள் | 6,001.00 | - | 6,001.00 | பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயற்சி நிலையம்<br>சப்ரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி |
| ஜப்பான் மொழி **(National Aptitude Training NAT 04 & 05)** | 04 மாதங்கள் | 18 - 45 | முதல் முறையாக தொழிலுக்காக யப்பானுக்கு புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு | 24,000.00 ஒரு பாடநெறிக்கு ரு.12,000.00 | - | 24,000.00 ஒரு பாடநெறிக்கு ரு.12,000.00 | தம்புள்ளை மாவட்ட நிலையம்<br>தங்காலை / தென்மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - தங்காலை<br>பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம்<br>சபரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>வடமேல் மாகாண பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>ஊவா மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - ஹாலிஎல<br>மேல் மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - மத்துகம<br>பொலநறுவை மாவட்ட நிலையம்<br>வடமத்திய மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - அநுராதபுரம்<br>காலி மாவட்ட பயிற்சி நிலையம்<br>சிலாபம் மாவட்ட நிலையம |
| கைத்தொழில் பயிலுனர்களுக்கான உள்ளக பயற்சி நிகழ்ச்சித்திட்டம் **(Technical Intern Training Programme/ TITP)**<br>1. நோயாளர் பராமரிப்பு<br>2. கட்டுமானத் துறை ஊழியர்கள் | வதிவிட 05 மாதங்கள் அல்லது 04 மாதங்கள் | 18 - 30 | முதல் முறையாக தொழிலுக்காக யப்பானுக்கு புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு | இரண்டு நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இப்பாடநெறிகளுக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. பயிற்சிப் பாடநெறிக் கட்டணம் மற்றும் வசதிகள் இரண்டு நாடுகளாலும் வழங்கப்படுகின்றது. | | | தென் மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - தங்காலை |
| கொரியா நடைமுறை பயிற்சி பாடநெறி | வதிவிட 10 நாட்கள | 18 - 39 | முதல் முறையாக தொழிலுக்காக கொரியாவுக்கு புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு | 35,000.00 | - | 35,000.00 | ஹாலிஎல புலம்பெயர்வு வள நிலையம் |
| இரண்டு நாள் திசைமுகப்படுத்தல் பயிற்சி பாடநெறி | 01 நாள் | 18 - 45 | முதன்முறையாக வீட்டு வேலை அல்லாத தொழில்களுக்கு வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு | 1,799.00 | - | 1,799.00 | தம்புள்ளை பயிற்சி நிலையம்<br>தங்காலை புலம்பெயர்வு வள நிலையம்<br>பன்னிபிட்டிய பயிற்சி நிலையம்<br>இரத்தினபுரி புலம்பெயர்வு வள நிலையம்<br>கண்டி பயிற்சி நிலையம்<br>குருநாகல் பயிற்சி நிலையம்<br>ஹாலிஎல புலம்பெயர்வு வள நிலையம்<br>மத்துகம புலம்பெயர்வு வள நிலையம்<br>பொலநறுவை பயிற்சி நிலையம்<br>அனுராதபுரம் பயிற்சி நிலையம்<br>காலி பயிற்சி நிலையம்<br>அம்பாறை பயிற்சி நிலையம்<br>சிலாபம் பயிற்சி நிலையம்<br>திருகோணமலை மாவட்ட நிலையம்<br>மட்டக்களப்பு மாவட்ட நிலையம்<br>வடமாகாண புலம்பெயர்வு வள நிலையம்<br>யாழ்ப்பாணம் மாவட்ட நிலையம |
| வீட்டு அடிப்படையிலான நோயாளர் பராமரிப்பு ஊழியர்கள் வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்னர் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 07 நாட்கள் | 18 - 45 | இஸ்ரேல் நாட்டிற்கு பணியகத்தின் மூலம் வெளிநாட்டிற்கு செல்வதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு | இலவசம் | | | தென் மாகாண புலம்பெயர் வள நிலையம் - தங்காலை<br>சப்ரகமுவ மாகாண புலம்பெயர்வு வள நிலையம் - இரத்தினபுரி |

* மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு வீசா பெற்றுக்கொள்வதற்கு பூர்த்திசெய்ய வேண்டிய ஆகக்குறைந்த வயதெல்லையை அறிந்துகொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை தொடர்பு கொள்ளவும்.

மேற்படி ஒவ்வொரு பயிற்சிக்கும் பதிவு செய்து கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு அல்லது வேறு ஏதேனும் தகவல்களை அறிந்து கொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற இலக்கத்தை அல்லது 24 மணித்தியால தகவல் நிலையத்தினை 011 – 2880500 இலக்கம் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.

"இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை தொடர்பு கொள்ளக்கூடிய 'நேரடி தொலைபேசி இலக்கங்கள் யாவை?"

இவ் வினாவுக்கான விடையை பின்வரும் முறையில் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (**IOM**) நேரடி தொலைபேசி இலக்கம் 0774410086 இற்கு **SMS** (குறுஞ்செய்தி) வாயிலாக மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் தொலைபேசி முற்கட்டண அட்டைகளை (ரீலோட்) சீட்டிழுப்பு முறையில் வெற்றி பெறலாம்.

**SMS** / குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை

செய்தி / பால் / வயது / மாவட்டம் / விடை ................................ 0774410086

உதாரணம்

**News/ M/ 14/ Colombo/ Answer**
செய்தி / ஆண் / 14 / கொழும்பு / சரியான விடை

SBFE

IOM
UN MIGRATION

(C-1981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள வேண்டியவன் நீ!

தனியொரு தரணி வேண்டி
தவமிருந்த ஞானிகள் கோடி
ஓர் அடியில் உன் வாழ்வு
அண்டம் ஆளும் உடைமை
தனிதேசம் வேண்டாம்
உன்னையே முதன்மையாய்
கொண்ட தேசம் வேண்டி
என் ஒவ்வொரு சுழற்சியும்
உன் முதுகை நோகவில்லை...
ஆளும் ஆளுமை தந்தேன்
பையை எறிந்த உன்
கொற்றம் -மீளும் அதைத் தொட!
ஆள வேண்டியவன் - நீ!

சு.சுனந்திகா,
புன்னாலைக்கட்டுவன்.

# பெண்ணின் பெருமை



பெண் இல்லாத வாழ்வு துன்ப சுமையல்லவா
வாழும். காலங்கள் பெண்கள் திறமையின் சிகரமல்லவா
அழகில் பொக்கிசம் அவளிடம் கண்டு கொண்டோம்
சமையல் செய்யும். கொடை அவளுக்குண்டல்லவா


பெண்ணை தாயாக மதிக்கும் ஆண்கள் பாரில்
வாழ்க்கைத் துணைவி இறைவனின் வரமல்லவா
பிள்ளைச் செல்வத்தை சுமக்கும் தாயல்லவா
பெண்ணின் கண்ணீர் கூரிய வாளுக்குச் சமமாகுமே

காமத்தின் கருவியாய் கருதிட முடியுமா
கண்கள் திறந்திட கனவழி கூறிடுவாள்
பொறுமையில் பொக்கிசமாய் திகழ்ந்திடுவாள்
குடும்ப வாழ்வில் குத்துவிளக்காய் ஒளி விடுவாள்

தன் குருதியைப் பாலாகக் கொடுத்து
சேயை வளர்த்திடுவாள்
அடை காக்கும் குஞ்சு போல் அரவணைத்து காத்திடுவாள்
பற்பல கனவுகளுடன் கருவை சுமந்திடுவாள்
நல்லதொரு தாயாய் நல்வழி காட்டுவாள்.

எஸ்.பி.தனா. தெல்லிப்பழை.

# என் இதயத்தில் குடியிருக்கும் தேவதையே




பெண்ணே!
நான் செய்த தவம் என்னவோ
உன்னைக் காண
நான் பெற்ற வரம் என்னவோ
உன்னோடு வாழ
உன்னைப் பிரிந்தால் நான்
இறந்து போவேன்
தூங்கும் போது கூட
உன்னை மறவேன்

யாரோடும் இல்லாத உறவு உன்னோடு
நீ இல்லையெனில் நான்
மண்ணோடு
பூக்கள் எல்லாம் உறவாடும் காற்றோடு நீ
ஒன்றாய் கலந்தாய் என்னோடு
உனக்கும் எனக்கும் ஒரு
உலகம் வேண்டுவோம்
நாம் இறைவனிடம்

என் தாயின் அன்பை
நான் உன்னில் கண்டேன்
நீ அருகில் இருக்கையில்
வானவில்லை மண்ணில் கண்டேன்
மழையோடு வெயிலைக் கண்டேன்
வெயிலோடு மழையைக் கண்டேன்
என் இதயத்தில் குடியிருக்கும்
தேவதையாய் வாழ்வில்
உன்னைக் கண்டேன்.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## மௌனத்தின் தேடல்- 601



# கனவும் நினைவும்

தன் பிள்ளை பின்தங்கக் கூடாதென
பெற்றோர் பட்டதாரி ஆக்கின்றனர்
பால் கறப்பது, பெற்றோல் அடிப்பது,
பழம் பொறுக்குவது, முட்டை அடுக்குவது
இப்போ பட்டதாரிகள் தான்.


பி.மதுஷ்சன்.
தையிட்டி.

# பிசுனசு

கல்வி என்பது
கண் திறக்கும் கருவியே
அதை பொதி சுமக்கும்
கழுதைக்கானதாய் ஆக்கும்
முகவர்களை இல்லாதொழிக்கும் வரை
கல்விக்கான வியாபாரம்
நடந்து கொண்டேயிருக்கும்

உதிஸ்ரன்.
தெல்லிப்பழை.

## மௌனத்தின் தேடல்- 602



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# சிறுவர் நிலையும் சிலந்தி வலையும்

மனங்களிலும் மகிழ்ச்சி இல்லை
முகங்களிலும் மலர்ச்சி இல்லை
படிப்பு என்பது ஒரு
திணிப்பு ஆக உள்ளவரை
சிறுவர்களின் கல்வி என்பதும்
மகிழ்ச்சிகரமான கற்றல் இன்றி அடி
மட்டத்திலேயே அல்லற்படும்
சிலந்தி வலையில் அகப்பட்டு
சிறுவர் நிலையும் துன்பமாகும்.

வாணியழகன். முரசுமோட்டை.

# கல்வியைக் காப்போம்!

கல்விக் கண் திறந்த
காருண்யன்கள் வாழும் பூமியில்
கல்வியை வியாபாரமாக்கும்
கறுமாங்கள் நடக்கவே செய்கின்றது.
இதைக் கண்டுகொள்ளாமல்
விடுவது நியாயமல்ல
ஆதலால் நாம் விழிப்பாய் இருப்போம்
கல்வியைக் காப்போம்

தனுசாயி.
சாவகச்சேரி.

# வேண்டாம்

படி படி என்று
பிஞ்சுகளை வெதும்பச் செய்யும்
நாசகாரரே!
உணர்ந்து கொள்ளுங்கள்
கற்றுணர்ந்து வருவதே கல்வி
இதைப் புரியாதவரை
பெற்றோரை ஏமாற்றி
பிஞ்சை பழுக்க வைக்கும்
நாசச் செயல் நடக்கவே செய்யும்

ரகுவரன். யாழ்ப்பாணம்.

# சுமையான வாழ்வு

நாணயமானவனே நானி குறுகியது ஏன்
பள்ளி செல்லும் பாலகனே பரிதவித்துப் போனது ஏன்
நாளை உலகு ஆளுகின்ற நாயகன் நீ அல்லவோ
பாடப்புத்தகம் பாரிய சுமை ஆனதனால்
ஆச்சரியக்குறி ஆனவனே கேள்விக்குறி ஆனதுவோ
சுமையான வாழ்வு சுகமாக வேண்டும்
நிறைவான கல்வி நிலையாக வேண்டும்
வளமான எதிர்காலம் இனிதாக வேண்டும்

கும்பமொழியான். உடுப்பிட்டி.

# நிமிர முடியாது

புலமைப்பரிசில் பரீட்சை முடிந்தது
புத்தகப்பை முதுகை விட்டு விலகியது
நிமிர முயன்றேன் முடியவில்லை
அதிக அழுத்தத்துடன் க.பொ.த
முதுகில் ஏறி இருந்தது.

பிரமன்.
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**திரைப்படம்: பாலும் பழமும் (1961)**
**பாடியவர்: '. சுசீலா**
**இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்**
**இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்**



**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்**
**இது யார் பாடும் பாடல் என்று நீ கேக்கிறாய்**
**நான் அவள் பேரை தினம் பாடும் குயிலல்லவா**
**என் பாடல் அவள் தந்த மொழி அல்லவா**
**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்**
**இது யார் பாடும் பாடல் என்று நீ கேக்கிறாய்**

**என்றும் சிலையான உன் தெய்வம் பேசாதய்யா**
**சருகான மலர் மீண்டும் மலராதய்யா**
**கனவான கதை மீண்டும் தொடராதய்யா**
**கனவான கதை மீண்டும் தொடராதய்யா..**
**காற்றான அவள் வாழ்வு திரும்பாதய்யா**
**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்.**

**எந்தன் மனக்கோயில் சிலையாக**
**வளர்ந்தாளம்மா**
**மலரோடு மலராக மலர்ந்தாளம்மா**
**கனவென்னும் தேரேறி பறந்தாளம்மா**
**கனவென்னும் தேரேறி பறந்தாளம்மா**
**காற்றோடு காற்றாக கலந்தாளம்மா**
**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்**
**இது யார் பாடும் பாடல் என்று நீ கேக்கிறாய்**

**இன்று உனக்காக உயிர் வாழும்**
**துணையில்லையா**
**அவள் ஒளி வீசும் எழில் கொண்ட**
**சிலையில்லையா**
**அவள் வாழ்வும் நீ தந்த வரமல்லவா**
**அவள் வாழ்வும் நீ தந்த வரமல்லவா**
**அன்போடு அவளோடு மகிழ்வாளய்யா ஆ ஆ ஆ**
**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்**
**இது யார் பாடும் பாடல் என்று நீ கேக்கிறாய்**
**என்னை யாரென்று எண்ணி எண்ணி**
**நீ பார்க்கிறாய்...!**

# ஒஸ்கார் விருது வென்ற The Elephant whisperers ஆவணப்படம்

இந்த வருடம் ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா, களைகட்டியது. பொதுவாகவே ஒஸ்கார் விருது என்றால், நன்றாக நடிப்பவர்களுக்கு என்று தான்? முதலில் நினைப்போம். நம் முன் இருப்பவர்கள் பேசும் போது, அது நடிப்பு எனத் தெரிந்தால் யார் யாருக்கோ ஒஸ்கார் கிடைக்குது. உனக்குத்தான் முதல்ல குடுக்கனும் என நாம் விளையாட்டாக சொல்வது உண்டு.

ஆனால் ஆவணப்படங்கள் என்றால் நிஜ வாழ்க்கையை எடுத்துக் காட்டுவது. நடிப்பிற்கு அங்கு இடமில்லை.

அந்த வகையில் விருது பெற்ற **The elephant whisperers** ஆவணப் படத்தை விருது வாங்கியிருக்கிறதே இந்தப் படம். பார்த்தே தீர வேண்டும் எனப் பார்த்தேன்.

நாற்பதே நிமிடங்கள் தான் நகர்கிறது இந்த ஆவணப் படம். அந்த நாற்பது நிமிடங்களும் நாமும் காட்டுக்குள் வாழ்ந்த ஒரு உணர்வு.

முதுமலை வனப்பகுதியின் அழகிய காலை, மாலை, இரவு என மூன்று வேளைகளிலும் காண்பித்த விதம் அவ்வளவு அற்புதம்..



தாயை இழந்த குட்டி யானைகளை (ரகு, அம்மு) வளர்க்கும் பணி கிடைக்கிறது பொம்மன், பெல்லி தம்பதியர்க்கு. அவற்றை அவர்கள் எவ்வளவு பாசத்துடன் மிகுந்த சிரமங்களுக்கிடையே வளர்க்கிறார்கள் என்பதை இந்த ஆவணப் படம் நமக்கு விளக்குகிறது.

யானையை இவர்கள் பராமரிக்கும் விதம் அருமை. குட்டி யானைகளும் இவர்களுடன் ஒட்டிக் கொள்வது சொல் பேச்சைக் கேட்பது, மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இருக்கும் பந்தம் இவற்றை காட்சிப்படுத்திய விதம் அதுவும் எந்த அதிகப்படியான காட்சிகள் இன்றி தெளிவாக புரிய வைத்தது ஆகியவற்றை ஒற்றை வரியில் கூற வேண்டுமானால் 'வாவ்' என்று தான்? சொல்ல வேண்டும்.

முக்கியமாக காட்டுடன் இணைந்து வாழும் மனிதர்கள். அவர்களின் நம்பிக்கைகள், இயற்கையை மதிக்கும் அவர்களின் குணாதிசயங்கள். இன்றைய நாகரீக உலகம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று.

காட்டில் வாழும் பறவைகள், வன விலங்குகள், முக்கியமாக மனிதர்களோடு சேர்ந்தே வாழும் குரங்குகள், காட்டுப் பன்றிகள் ஆகியவற்றை காண்பித்ததில் இயக்குநர் தன் திறமையை வேறு இடத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்.

அதுவும் முக்கியமாக மலைப் பாறைகளின் இடுக்கில், உயிரைத் துச்சமாக எண்ணி, தேன் கூட்டில் இருந்து தேன் எடுக்கும் காட்சியைப் பதிவு செய்ததற்கு எக்கச்சக்க அப்ளாஸை வாரி வழங்கலாம்.

யானைக்கு டியூபில் பால் ஊட்டுவது, களியை பிசைந்து உருண்டைகளாக வாயில் வைப்பது, தேங்காயைப் பார்த்தவுடன் யானைக் குட்டி களி திங்காமல் தேங்காய்க்கு ஆசைப்படுவது, நல்ல நாட்களில் யானைகளுக்கு அலங்காரம் செய்து கோவிலுக்கு அழைத்துச் செல்வது, அவைகளும் அங்கு விநாயகரைப் பார்த்து வணங்குவது ஆகிய காட்சிகள் இரசிக்க வைக்கின்றன.

முதலில் ரகுவை வளர்ப்பது பிறகு அம்மு வந்து சேர்வது அம்முவின் வருகையை முதலில் ஏற்காத ரகு, பின் நட்புடன் பழகுவது இன்னொரு பெரிய யானை கிருஷ்ணாவுடனான நட்பு, ஆகிய காட்சிகள் யானைகள் உலகத்தை நமக்குப் புரிய வைக்கின்றன.

ரகுவும் அம்முவும் அந்தத் தம்பதியரின் நிஜக் குழந்தைகள் போலவே உணர்கின்றன. யானையை அவர்கள் மட்டும் அல்லாமல், அந்தப் பகுதியில் வாழும் சிறுவர்களும் குளிப்பாட்டுவது அதனுடன் ஆனந்தமாக விளையாடுவது எனப் பார்க்கையில் அடுத்த ஒரு தலைமுறையும் யானைகள் பராமரிப்பிற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை ஊர்ஜிதம் செய்கின்றது..

மலைகள், காடுகள், தெளிந்த நீர்நிலைகள், மேகங்கள், வனவிலங்குகள், காட்டின் அமைதி, அதன் தூய்மை இவையாவும் ஒளிப்பதிவு செய்து நம்? கண்களுக்கு விருந்தாக்கியிருக்கிறார்கள்.

தாயைப் பிரிந்த குட்டி யானை ரகுவை நன்றாக வளர்த்த பின், அரசாங்க ஆணைப்படி அதை வளர்த்த அந்தத் தம்பதியர் அதை பிரியும் தருணத்தில் அவர்களைப் போலவே நமக்கும் அழுகை வருவது தான் இத்திரைப்படம் விருது வாங்கியதற்கான காரணம் என நான் நினைத்தேன்.

ரகுவை பிரிந்த அம்முவும் சில நாட்கள் எதுவும் சாப்பிடாமல் தன் சோகத்தைக் காட்டியது. இன்னமும் இந்த உலகம் சுழல்வதற்கு பாசம் என்ற ஒன்றே காரணம் என்பது தெளிவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

334

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உயர்குருதி அமுக்கம் என்றால் என்ன?

**'குருதி அமுக்கம் என் றால் என்ன?'**

உங்கள் உடலில் குருதி குழாய் களில் குருதி சுற்றியோடும் போது ஏற்படும் அமுக்கமாகும்.

சாதாரணமாக இது எவ்வளவு இருக்கும்?
சுருங்கல் அமுக்கம்-120 mmHg
விரிதல் அமுக்கம்-80 mmHg

இது இளம் பராயத்தவர்க்கு சற்று குறைவாகவும் முதியோருக்கு சற்று அதிகமாக காணப் படும்.

**உயர்குருதி அமுக்கம் என் றால் என்ன?**

குருதி அமுக்கம் மேற்குறிப் பிட்ட அளவைவிடகூடுதலாக இருத்தல் பொதுவாக சுருங்கல் அமுக்கம் -140 mmHg ஐ விட கூடுதலாகவும் விரிதல் அமுக்கம் - 90 அஅஉப ஐ விட கூடுதலாக வும் இருப்பின்யாருக்கு உயர் குருதி அமுக்கம் ஏற்பட வாய்ப் புக்கள் அதிகம்?

- வயது அதிகரிக்கும்போது.
- உடல் நிறை அதிகமான வர்கள்.
- சிகரட்பாவனையாளர்கள்.
- நீரிழிவுநோய்,சிறுநீரகநோய் போன்றவருத்தம் உள்ளவர்கள்.
- குடும்ப அங்கத்தவரில் பலர் உயர் குருதியமுக்கத்தால் பாதிக்கப் பட்டிருப்பின்.



**குருதியமுக்கம் கட்டுப்பாட் டில் இல்லாவிடில் என்ன பிரச் சினைகள் ஏற்படும்?**

- இருதயநோய்
- சிறுநீரக செயலிழப்பு
- பரிசவாத நோய்
- குருதிக்குழாய்கள் பாதிப் படைதல்

**குருதியமுக்க நோயை கட் டுப்பாட்டில் வைத்திருக்க நான் என்ன செய்ய வேண்டும்?**

- சரியான உணவு பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
- உடல்நிறையை அளவாக பேணவேண்டும்
- தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
- புகைபிடிப்பதை நிறுத்த வேண்டும்
- வைத்தியர் தரும் மருந்து வில்லைகளை அவர் கூறிய அறி வுரைக் கேற்ப தவறாது உள் ளெடுக்க வேண்டும்.
- உங்கள் குருதியமுக்கத்தை சரியான கால இடைவெளியில் சோதித்து பார்க்கவேண்டும்.

**நான் எவ்வகையான உணவு முறையை கடைப்பிடிக்க வேண்டும்?**


- உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண் டும்.
- புகையூட்டப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- அதிக கொழுப்பு அடங்கிய உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- பழங்களையும் மரக்கறி களையும் அதிகம் உள்ளெடுக்க வேண்டும்.
- மீன்உணவுகள்உடலுக்குநன்று.

**நான் வீட்டில் எவ்வாறு குருதி அமுக்கத்தை சோதித்துபார்ப்பது?**

- குருதியமுக்கத்தை சோதிக்க முன் புகைப் பிடிக்ககூடாது
- கோப்பி, தேநீர் போன்ற பானங்களை உள்ளெடுக்கக் கூடாது
- 30 நிமிடங்களுக்குள் உடற் பயிற்சி செய்திருத்தலாகாது.
- ஐந்து நிமிடங்கள் கதிரையில் இளைப்பாறிய பின்னரே அளவிட தொடங்க வேண்டும்.
- சரியான அளவுள்ள "உரகக ஐ பயன்படுத்தவேண்டும்.
- சோதிக்க முன்கதிரையில் சரியாக அமர வேண்டும் சோதிக் கும் "உரகவ ஐ முழங்கைக்கு மேல் கட்ட வேண்டும்.
- கையை ஒருமேசையில் தளர்வாக வைக்கவேண்டும். கை உங்கள் இதயத்தின் மட் டத்தில் இருக்கவேண்டும்.
- அளவிடும்போதுகதைக்கக் கூடாது.
- அளக்கும் இயந்திரம் மூலம் குருதியமுக்கத்தை அளந்து சரியாக குறித்துக்கொள்ள வேண்டும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

19.03.2023 மூன்று காட்சிகள்
சாவகச்சேரி பாலா திரையரங்கில்
ஞாயிறு மாலை 2.30 மணி & 5.00 மணி
யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில்
ஞாயிறு மாலை 3.00 மணி



0776025070, 0778256757

## பசுப்பால் அருந்துவதால் சளிபிடிக்கிறது இதற்கு என்ன செய்யலாம்?

சிலருக்கு பால்குடிக்கும் போது சளி பிடிப்பது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படுகிறது.

இதற்கு காரணம் பசுப்பாலிற்கு அவர் களில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை வகை யான வெளிப் பாடாகும். பால்குடிக்கும் போது சளிபிடிக்கும் தோற்றப்பாடு ஒரு பிரச்சினையாக அமைந்தால் பசுப்பால் குடிப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது.

எனவே நீங்கள் பால் குடிப்பதை நிறுத்தி விட்டு பால்மா வகைகள் அல்லது ஆட்டுப் பாலைப் பாவித்து பாருங்கள் அதனால் உங் களிற்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாவிடின் தொடர்ந்து பாவிக்கலாம். உங்களிற்கு எல்லா வகையான பால், பால்மா, பால் சேர்த்த உணவுவகைகள் அனைத்திற்கும் ஒவ் வாமை வகை யான தாக்கம் ஏற்படின் பால் உற்பத்தி பொருட்களைப் பாவனையை முற்றிலும் நிறுத்திவிட்டு வேறுவகையான புரதங் களை, சோயா, பால், முட்டை, மீன், என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களின் அ.அட்டைக்கு சிம் அட்டை வழங்க வேண்டாம்

## தொலைத் தொடர்பு ஆணைக்குழு

(கொழும்பு)

உயிரிழந்தவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களுக்கு கையடக்க தொலைபேசிசிம்அட்டைகள்வழங்க வேண்டாம் என அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொலைபேசி சேவை நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களின் பெயர்கள், அவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய பட்டியல் நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் மாதத்திற்கு ஒரு முறை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

ஒருவர் இறந்தவுடன் தொடர்புடைய தொலைபேசி எண்ணைத் துண்டிக்கவும் அவரது தேசிய அடையாள அட்டை எண்ணுக்கு சிம் வழங்குவதைத் தடுக்கவும் தொலைபேசி சேவை நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# சாக்குப்போக்கு கூறாமல் தேர்தலை உடன் நடத்துங்கள்

## சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

எவ்வித சாக்குப்போக்கையும் சொல்லாமல் உடனடியாக தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலையே நடத்த இந்த அரசாங்கம் பின்னடிக்குமானால், மாகாணசபை, பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல்களின் நிலைமை என்னாகும் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

மக்களின் வாக்குரிமையை தட்டி பறிக்க முடியாது என்பதனால் விரைந்து உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கம் நடத்திட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் ஆணைக்கு வழிவிடுவது அரசாங்கத்தின் கடமை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் குறிப்பிட்டார். (4)


அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை-நல்லூர் உப அலுவலகம் திருநெல்வேலி

ஆதனப் பெயர்மாற்றம்

ஆதன இல, 119 முருகன் ஒழுங்கை வட்டாரம் 06

ஆதன இல 119முருகன் ஒழுங்கை வட்டாரம் 6 இல் அமைந்துள்ள ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் தம்பித்துரை எனும் பெயரில் காணப்படுகின்றது.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை 'குருந்தன் புலம்' இல 609 உறுதிப்படி நிலப்பரப்பு 7 குளி 2. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் k.கனகசபை அவர்களால் 03.05.2004 ஆம் திகதியில் அளந்து வரையப்பட்ட 1492/04 இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1,2.3 ஆக சுட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகளாக வடக்கு-பாரதி வீதி, கிழக்கும் தெற்கும் இராமநாதன் சுரேந்திரன் பெண் சிவரூபவதியினாதனம், மேற்கு இராசையா பெண் துரைமணியினாதனம் என காணப்படுகின்றது.

இவ் ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு V.சத்தியநாதன் அவர்களால் 31.10.2000 ஆம் ஆண்டு 379 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியின் மூலம் கனகசபை இந்திரலிங்கம் என்பவர் தனது 15 வருடங்களுக்கு மேற்பட்ட குழப்பமற்ற ஆட்சியின் மூலம் தனது சொந்தமான ஆதனம் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை உறுதி இல 609 /06.10.2001 இன் மூலம் செல்வராசா ஞானசேகரத்திற்கு அறுதியாக கொடுத்துள்ளார்.

இவ் ஆதனத்தின் வடகிழக்கு பக்கமாக நிலப்பரப்பு 2 ஆம் பயிர்வகைகளும் பிரசித்த நொத்தாரிசு ச.தங்கமாமயிலோன் முகதாவில் 2111/27.03.2004 உறுதியின் மூலம் செல்வராசா ஞானசேகரமும் பெண் சுசிலாதேவியும் ஆகியோர் இராசையா பரமேஸ்வரன் பெண் மோகனாவிற்கு சீதனமாகவும் மற்றும் தென்கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு 1 குளி 9.03 இனை பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 5827/08.03.2006 உறுதி மூலம் குமாரு சிறிஸ்கந்தராஜாவும் பெண் விஜயலோசனிக்கும் அறுதியாகவும் கொடுத்துள்ளார். மிகுதியாகவுள்ள நிலப்பரப்பு 3 குளி 7.75 இனை தமக்குரிய ஆதனம் என பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் அல்லது ஆட்சேபனைகள் காணப்படுமிடத்து பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அறியத்தருமாறும் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினருடாக ஆட்சேபனை தெரிவிக்குமாறும் அவ்வாறு எவரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வராசா ஞானசேகரம் என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இப் பெயர்மாற்றம் தொடர்பாக எழக்கூடிய எச்செயற்பாட்டிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**நல்லூர்.**

(C-6179)


# புதுக்குடியிருப்பில் சமூகநலச் செயற்பாடுகளில் புகழ்பெற்று விளங்கும் இஷானியாக் கலாமன்றம்




புதுக்குடியிருப்பு இஷானியாக் கலாமன்றம் முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளை வீதியில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ளது. இக்கலாமன்றம் 2020.03.14 அன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயக்காந் அவர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இம் மன்றத்தின் நிறுவுநரும் இயக்குநருமாக வை.கமலராஜா அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இவரின் தாராள மனப்பாங்கில் உதயமாகிய கலாமன்றம் பல்வகையான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. தனது மூத்த மகளான திருமதி.மதன் நிறோசாவின் மூத்த புதல்வி இஷானியாவின் நாமத்தையே கலாமன்றத்தின் நாமமாக சூட்டினார்.

போர்ச்சூழலில் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கிராமத்தில் கலாமன்றத்தின் வருகையினால் பல நலிவுற்ற குடும்பங்கள் ஆதரவைப் பெற்றன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. GA 00263011 இதன் பதிவிலக்கமாகும். கொரோனா காலத்தில் சாவகச்சேரி, நுணாவில், மூளாய், கரவெட்டி, விசுவமடு, புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, வவுனியா ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 38 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளான வீடு, மலசலகூடம், கிணறு என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.வறிய மாணவர்களுக்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படுகின்றது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வறிய மக்களுக்கான அன்னதான நிகழ்வும் நடைபெறுகின்றன. அண்மையில் 700 மாணவர்களுக்கு ஒரு கிலோ சத்துமாப்படி 700 கிலோ சத்துமாப் பொதிகள் வழங்கப்பட்டன. இவற்றோடு 350 மாணவர்களுக்கு 1200 ரூபாய் பெறுமதியான பரிசுப் பொருட்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டன.கவிஞர் யோ.புரட்சியினால் எழுதப்பட்ட "சேதி சொல்லும் சின்னப் பாட்டு" எனும் சிறுவர் இலக்கியம் மன்றத்தின் நிதி அனுசரணையில் வெளியீடு செய்யப்பட்டது. உலக மகளிர் தினத்தில் சாதனைப் பெண்கள் பத்துப் பேர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். முல்லைத்தீவு ஊடக அமையத்தின் வளர்ச்சிக்காக ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. மன்றத்தினால் கல்வி நிலையமும் நடத்தப்படுகின்றது. தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு ஆகிய பாடங்கள் திங்கள் முதல் வெள்ளி வரை நடத்தப்பட்டு வருகின்றன. கல்வி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாசிரியராக ச.பாஸ்கரன் (மு/வலைஞர்மடம் அ.த.க. பாடசாலை-உப அதிபர்) அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

மன்றத்தின் தலைவராக கவிஞர் யோ. புரட்சியும் செயலாளராக் வித்தகக் கவிஞர் ஜெயம் ஜெகன் (யோகா, வர்மக்கலை, கராத்தை, ஆசிரியர்) பொருளாளராக திருமதி. ம.கமலினியும் செயற்பட்டு வருகின்றார்கள். (C-6178)


அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை-நல்லூர் உப அலுவலகம் திருநெல்வேலி

ஆதனப் பெயர்மாற்றம்

ஆதன இல, 605 கண்டி வீதி, இடது பக்கம் வட்டாரம் 10

ஆதன இல 605 கண்டி வீதி வட்டாரம் 10 இல் அமைந்துள்ள ஆதனம் பிரதேச சபை ஆதனப் பதிவேட்டின் பிரகாரம் E.மரியாம்பிள்ளை மே.பா வரப்பிரகாசம் எனும் பெயரில் காணப்படுகின்றது.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று அரியாலை இறை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு J/94 அரியாலை மத்தி கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட 'சங்கன் வளவு' பிரசித்த நொத்தாரிசு ரிஷிபா இராசா அவர்களால் நிறைவேற்றப்பட்ட இல 2820 உறுதிப்படி நிலப்பரப்பு 3 1/4 இது உத்தரவு பெற்ற அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 11.08.2021 ஆம் திகதியில் 7002 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகளாக வடக்கு எஸ்.கந்தையாவின் ஆதனம், கிழக்கு 12 அடி அகல ஒழுங்கை, தெற்கு கண்டி வீதி, மேற்கு P.கிருஸ்ணபிள்ளையின் ஆதனம்.

இவ் ஆதனமானது 2820 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் தனது பேரன் தேவசகாயம் மரியாம்பிள்ளைக்கு சொந்தமானதாக இருந்தது. அவர் சொத்து அறுதியின்றி இறக்க தனது காலம் சென்ற தாயார் கபிரியேல்பிள்ளை நல்லம்மா வினதும் ஆட்சியினை தொடர்ந்து தனது 35 வருடங்களிற்கு மேலான ஆட்சியிலும் பராமரிப்பிலும் இருந்து வருகின்றது எனவும் கபிரியேல்பிள்ளை திருஞானராஜா (தே.அ.அ இல 593143287V) என்பவர் வெளிப்படுத்தி உறுதி நிறைவேற்றி யுள்ளதோடு இவ்வாதனத்தின்ன கபிரியேற்பிள்ளை திருஞானராஜா என்ற பெயரிற்கு ஆதனப்பதிவேட்டில் பெயரினை உட்புகுத்தி தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது உரிமைகோரின் பத்திரிகையில் விளம்பரம் செய்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அல்லது ஆட்பேனை தெரிவிப்பதாயின் உரிய ஆவணங்களோடு அறியத்தருமாறும் வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர் ஊடாக ஆட்சேபனை தெரிவிக்குமாறும் அவ்வாறு எவரும் உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது கபிரியேற் பிள்ளை திருஞானராஜா என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும் என்பதுடன் இப் பெயர்மாற்றத்தால் எழக்கூடிய எந்த விளைவிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**நல்லூர்.**

(C-6180)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்தில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(வொஷிங்டன்)


நியூசிலாந்து நாடு பல தீவுக் கூட்டங்களை உள்ளடக்கி இருக்கிறது. அடிக்கடி சூறாவளி, நிலநடுக்கம் போன்ற பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடியது. உலகின் இரண்டு முக்கிய டெக்டோனிக் தட்டுகளான பசுபிக் தட்டு மற்றும் அவுஸ்திரேலிய தட்டு ஆகியவற்றின் எல்லையில் நியூசிலாந்து அமைந்துள்ளது.

இதனால், நிலநடுக்கங்களுக்கு ஆளாகிறது. ஒவ்வொரு ஆண்டும் நியூசிலாந்தில் ஆயிரக்கணக்கான நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. இந்த நிலையில், நியூசிலாந்தின் கெர்மடெக் தீவு பகுதிகளில் நேற்று அதிகாலை 3.44 மணியளவில் நிலநடுக்கம் ஏற்ப ட்டது. இது ரிக்டர் அளவில் 5.0 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கம் 10 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துஉள்ளது.

கடந்த வியாழக்கிழமை கூட, நியூசிலாந்தின் கெர்மடெக் தீவுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவில் 7.1 ஆக பதிவாகி இருந்தது. இதனைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது. (4)

# மருத்துவமனையே செல்லாத மூதாட்டி 121 வயதில் காலமானார்



(நாகலாந்)

நாகலாந்தில் புபிரே புகா எனும் 121 வயது மூதாட்டி கடந்த 16 ஆம் திகதி வயது முதிர்வு காரணமாக உயிரிழந்தார்.

இத்தனை வயது ஆனாலும் இவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து வந்தார். கண்கள் நன்றாகத் தெரிந்தது. காதுகளும் நன்றாகக் கேட்டது.

இதுவரை இவர் மருத்துவமனைப் பக்கமே சென்றது இல்லை என கிராம மக்கள் தெரிவித்து உள்ளனர்.

புபிரே புகா மரணம் அடைந்த செய்தி அறிந்ததும் உறவினர்கள், கிராம மக்கள் ஒன்றுதிரண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். அவர் இத்தனை வயது வரை வாழ்ந்ததை அவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். (4)

# சீன ஜனாதிபதி ரஷ்யா பயணம்



(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மூன்று நாட்கள் பயணமாக ரஷ்யாவுக்கு பயணமாகவுள்ளதாக, சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. நாளை திங்கட்கிழமை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அழைப்பை ஏற்று ரஷ்யா செல்லும் சீன ஜனாதிபதி 22 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என தெரிவிக்கபட்டுள்ளது.

சீன ஜனாதிபதியின் பயணத்தை சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹுவா சுன்யிங்கும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த பயணத்தின் போது ரஷ்ய ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் ஜி ஜின்பிங், உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சமாதான முயற்சியில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சீன ஜனாதிபதியின் வருகை குறித்த அறிவிப்பை, ரஷ்ய அரசாங்கமும் உறுதிப்படுத்தியள்ளது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நல்லுறவு மற்றும் ஒத்துழைப்பின் எதிர்காலம் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் நேரில் ஆலோசனை நடத்துவார்கள் என ரஷ்ய அரசாங்கம் கூறியுள்ளது.

உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யாவை தனிமைப்படுத்த அமெரிக்காவும் மேற்கத்தேய நாடுகளும்முயற்சிசெய்து வரும் சூழலில், அந்த நாட்டுடனான உறவை மேம்படுத்தும் வகையில் சீன ஜனாதிபதியின் இந்தப் பயணம் அமைந்துள்ளது. (4)

# புடினுக்கு பிறப்பிக்கப்பட்ட பிடியாணை செல்லுபடியாகாது

## ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

**புடினுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில், அது ரஷ்யாவில் செல்லுபடியாகாது என ரஷ்யா பதிலளித்துள்ளது.**

ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரைன் நாட்டுக் குழந்தைகளை சட்ட விரோதமாக ரஷ்யாவுக்கு நாடு கடத்துவதற்கு காரணமாக இருப்பதால், அவர் போர்க்குற்றங்கள் செய்துள்ளதாகக் கூறி, அவருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஆனால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் எந்த முடிவும் ரஷ்யாவில் செல்லுபடியாகாது என கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

புடினுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது மூர்க்கத்தனமான நடவடிக்கை என்று கூறியுள்ள ரஷ்யா, அதே நேரத்தில் ரஷ்யாவைப் பொறுத்தவரை அது அர்த்தமற்றது என்று கூறியுள்ளது.

ரஷ்யா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டம் என்னும் ஒப்பந்தத்தின் கீழ் இல்லை. அத்துடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கென தனியாக பொலிஸார் கிடையாது என்பதால் புடினைக் கைது செய்ய முடியுமா என்பது சந்தேகமே எனத் தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது ரஷ்ய எதிர்ப்பாளரான விளாடிமிர் புடினுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்ததை வரவேற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# "நான் திரும்ப வந்திட்டேன்" அதிரடி காட்டிய டிரம்ப்



(வொஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 2017 முதல் 2021 ஆண்டு வரை அமெரிக்காவின் ஜனாதிபதியாக செயற்பட்டு வந்தார்.

2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் தோல்வியடைந்து ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக வெற்றி பெற்றார்.

தனது தோல்வியை ஏற்க மறுத்த டொனால்ட் டிரம்ப் தனது ஆதரவாளர்களிடம் வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார். இதை அவர் தனது பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் நேரடியாக ஒளிபரப்பினார்.

அவரது பேச்சையடுத்து ஜனவரி 6 ஆம் திகதி டொனால்ட் டிரம்பின் ஆதரவாளர்கள் அமெரிக்க பாராளுமன்றத்திற்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து வன்முறையை தூண்டியதாக டொனால்ட் டிரம்பின் பேஸ்புக், யூடியூப் பக்கங்கள் முடக்கப்பட்டன.

இந்நிலையில், 2 ஆண்டாக முடக்கப்பட்ட பேஸ்புக், யூடியூப் பக்கங்கள் நேற்று செயற்பாட்டிற்கு வந்துள்ளன.

சமூக வலைத்தள பக்கங்கள் செயற்பாட்டிற்கு வந்துள்ள நிலையில் டொனால்ட் டிரம்ப் தனது பேஸ்புக், யூடியூப் பக்கங்களில் "நான் திரும்ப வந்துவிட்டேன்"என பதிவிட்டு காணொளி ஒன்றை இணைத்துள்ளார்.

இந்நிலையில், வரும் 2024 ஆம் ஆண்டு அமெரிக்க தேர்தலில் டொனால்ட் டிரம்ப் மீண்டும் போட்டியிட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# ஏவுகணைகளை பரிசோதனை செய்து புகைப்படங்களை வெளியிட்டது வடகொரியா


(பியாங்யாங்)

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை மேற்கொண்ட புகைப்படங்களை வட கொரியா வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா-தென் கொரியா இடையே கடந்த 13 ஆம் திகதியில் இருந்து மிகப்பெரிய அளவிலான கூட்டு இராணுவப் பயிற்சி நடைபெற்று வரும் நிலையில், அமெரிக்கா மற்றும் தென்கொரியாவை எச்சரிக்கும் வகையில் வட கொரியா நேற்று முன்தினம் Hwasong-17 எனப்படும் வடகொரியாவின் மிகப் பெரிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை மேற்கொண்டது.

அந்த புகைப்படங்களை வடகொரியா அரசு ஊடகம் தற்போது வெளியிட்டுள்ளது.

மேலும் ICBM ஏவுகணை சோதனையை ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது மகளுடன் நேரில் பார்வையிட்டார். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சுக் கொடுப்பது போன்றது.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் உறவுகளின் முதலீட்டை ஊக்குவிப்போம்

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் திருநாடு தன் சுயநிர்ணயத்தை இழந்து நிற்கிறது.

இலங்கைக்கு உதவுகின்ற நாடுகள் எதைக் கூறினாலும் அதற்கு ஏற்றாற்போல் ஆட்சியாளர்கள் தாளம் போட வேண்டிய் தேவை வந்துவிட்டது.

அதேநேரம் இந்த நாட்டில் வாழ முடியாது என்று வெறுங்கையோடு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த நம் உறவுகள் தாம் வாழும் நாடுகளில் மிகப்பெரும் கோடீஸ்வரர்களாக விளங்குகின்றனர்.

இது தமிழ் மக்களின் கடின உழைப்புக்கும் விடாமுயற்சிக்கும் அறிவுடைமைக்குமான தக்க சான்றாகும்.

சிலவேளைகளில் அத்தகு ஆற்றல்மிக்க தமிழ் மக்களை இந்த நாடு தன்னகத்தே வைத்திராததுதான், நாட்டின் பொருளாதாரம் இத்துணைதூரம் வீழ்ச்சி காண்பதற்குக் காரணம் என்று கருதுவதிலும் தவறில்லை.

எது எவ்வாறாயினும் புலம்பெயர் தமிழ் மக்களின் பொருளாதார பலம் இலங்கைக்கு வந்தாலொழிய இலங்கையை மீட்டெடுக்க முடியாதென்ற அளவுக்கு நிலைமை வந்து விட்டது.

அதனால், புலம்பெயர் தமிழ் மக்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு சிங்கள ஆட்சியாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

நல்லது. இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதிலும் புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் தமிழர் தாயகத்தில் அமைவதன் மூலம் எங்கள் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுடன் தமிழர் தாயகம் ஒரு பலமான பொருளாதாரக் கட்டமைப்பை எட்டுவதற்கும் வழிசமைப்பதாக இருக்கும்.

இதைநாம் கூறும்போது, இந்த நாட்டின் ஆட்சியாளர்களை நம்பி புலம்பெயர் தமிழ் மக்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முடியுமா? அதற்கான பாதுகாப்பும் உத்தரவாதமும் இருக்கிறதா? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

அவ்வாறு எழுகின்ற கேள்விகளில் நியாயமும் இல்லாமல் இல்லை.

இங்குதான் புலம்பெயர் தமிழ் மக்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளின் உத்தரவாதத்துடன் அல்லது இதுபோன்ற ஏற்பாடுகளுடன் முதலீடுகளை மேற்கொள்கின்ற தந்திரோபாயங்களைப் பின்பற்ற வேண்டும்.

தவிர, பொருத்தமான முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருக்கும்போது, அதனை நாம் பயன்படுத்திக் கொள்வதும் கட்டாயமானதாகும்.

அதாவது கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் தவறவிடுவோமாயின், அந்த இடத்தை இன்னொருவர் கைப்பற்றி விடுவார்.

சிலவேளைகளில் அவ்வாறான நபர்களால் நம் தமிழ் மண் இடர்பட வேண்டிய சூழ் நிலையும் ஏற்படலாம்.

ஆகவே, எங்கள் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளக்கூடிய முதலீடுகளை உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் முதலீடு செய்வதற்கு நம் புலம்பெயர் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.

இதற்கு நாமும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கி அதனை ஊக்குவிப்பதும் அவசியமானதாகும்.

# வவுனியாவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் மர்ம மரணம்

## பகுப்பாய்வு முடிவு கிடைப்பதில் தாமதம்

வவுனியா, குட்செட் வீதியில் மர்மமான முறையில் உயிரிழந்த ஒரே குடும் பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகளின் பகுப்பாய்வு பரிசோதனை முடிவுகள் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இச் சம்பவம் தொடர்பில் சந் தேகத்தின் அடிப்படையில் எவரும் ்கைது செய்யப்படவில்லை எனவும் வவுனியா பொலிஸார் நேற்று (18.03) தெரிவித்தனர்.

வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த 7 ஆம் திகதி காலை தம்பதிகள் மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர்.

வவுனியா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற்கூற்று பரிசோதனை கடந்த 08 ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்ட போதிலும், மரணத்திற்கான சரியான காரணம் வெளியாகவில்லை. ஆனால் அவர்கள் நஞ்சு அருந்தவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, உயிரிழந்தமைக்கான சரியான காரணத்தை கண்டறிய உடல் உறுப்புகள் மற்றும் இரத்த மாதிரிகள் அரசாங்க மரண விசாரணை திணைக்களம் மற்றும் மருத்துவ ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பகுப்பாய்வு பரிசோதனை முடிவுகள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனவும், அது கிடைப்பதில் தாமதங்கள் ஏற்படலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் முறையான விசாரணைகளை முன்னெடுத்திருந்ததாகவும், குறித்த மரணம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யபடவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-7,9,250)

# 14 வயது சிறுமியை அழைத்து சென்ற 20 வயது இளைஞன் கைது

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த பாடசாலைக்குச் செல்லும் 14 வயது சிறுமியை பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து குடும்பம் நடத்த அழைத்து சென்ற இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சிறுமியும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட இளைஞன் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

14 வயது சிறுமி பாடசாலைக்கு செல்ல முற்பட்ட போது சிறுமியை அழைத்துக் கொண்டு புதுக்குடியிருப்புக்கு பகுதிக்கு சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸில் சிறுமியின் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தெல்லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் உதயபாலா தலைமையில் புதுக்குடியிருப்பு பகுதிக்கு சென்ற பொலிஸ் குழுவினர் சிறுமியை மீட்டதுடன் இளைஞனை கைது செய்து அழைத்து வந்துள்ளனர்.

இருவரையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்ப்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# சுற்றுலாப் பயணிகளை பலவந்தமாக வாகனத்தில் ஏற்றிய 6 பேர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை பலவந்தமாக வாகனங்களில் ஏற்றி பணம் சம்பாதிக்கும் 6 பேர் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இவர்களை கைது செய்துள்ளதுடன், இந்நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தரகுபணம் வாங்கும் இந்த தரகர்கள், விமானநிலையத்தின் புறப்படும் முனையத்தின் முன்பு காத்திருந்து, முகவர்கள் இல்லாமல் நாட்டிற்குள் வரும் சுற்றுலாப் பயணிகளை வாகனங்களில் ஏறும் படி வற்புறுத்துவதை அவதானிக்க முடிகிறது.

அது மட்டுமல்லாமல் இலங்கைக்கு வரும் நபர்களின் பயணப் பொதிகளை வலுக்கட்டாயமாக ஏற்றி. அவர்களை மிரட்டி பணம் பறிப்பதுடன், அவர்களுக்கும் பெரும் தொல்லை கொடுக்கும் வகையில் செயல்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்வாறு செயற்படும் ஏனையநபர்கள் அடையாளம் காணப்பட்டு உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

# மத வழிபாட்டுத் தலங்களில் சோலார் பொருத்தும் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

மத வழிபாட்டுத் தலங்களில் சோலார் பேனல்கள் பொருத்தும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைக்கு 4 விகாரைகளில் சோலார் பேனல்கள் பொருத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டுள்ளார். அத்றகாக இந்திய அரசு 10 மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக கல்வி நிலையங்களுடன் இயங்கும் அனைத்து மதவழிபாட்டுத் தலங்களிலும் சோலார் பேனல்கள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு வருடத்திற்குள் அனைத்து மத வழிபாட்டுத் தலங்களிலும் சோலார் பேனல்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# இந்தியன் முட்டை இன்று இலங்கை வந்தடையும்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 1வது தொகுதி முட்டைகள் இன்று இலங்கையை வந்தடையவுள்ளது என அரச வர்த்தக இதர சட்டப்பூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இரண்டு மில்லியன் முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித் தார். தற்போதுள்ள முட்டை தட்டுப்பாட்டைக் குறைக்கவும்,

விலையைக் கட்டுப்படுத்தவும் முட்டைகளை இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்தது. குறித்த முட்டை இருப்புக்கள் பேக்கரி தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளதாக அரச வர்த்தக இதர சட்டப்பூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த முட்டைகளை பேக்கரி தொழிற்சாலைகளுக்கு 40 ரூபா அல்லது. அதற்கும் குறைவான விலையில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாக தயாரிக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில் சிதம்பரபுரத்தில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக அளவு காணி பிணக்குகளுக்கு முகங்கொடுக்கும் இடமாக கிளிநொச்சி

## அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடப்பெயர்வுகள் மற்றும் மீள் குடியமர்வின் பின்னரான செயற்பாடுகளில் அதிக அளவில் காணிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஒரு மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற அரச காணிகள் தொடர்பான இலவச சட்ட உதவி நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் இடப்பெயர்வுகள் மற்றும் மீள் குடியமர்வின் பின்னரான செய்றபாடுகளில் அதிக அளவில் காணிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஒரு மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது.

இவ்விதமான பிரச்சினை மக்களிடையே பாரிய ஒரு பிரச்சினையாகவும் மாறியுள்ளது. பல்வேறு வேலைத்திட்டங்களின் ஊடாக மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி உள்ளபோதும் இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.

அதிலும் சட்ட ஏற்பாடுகள் சட்டம் சார்ந்து இருக்கக்கூடிய பிரச்சினைகளால் மக்கள் திருப்தியடையக்கூடிய பதில்களை வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்விதமான பிரச்சினைகளுக்கு சட்ட உதவிகளை பெற வேண்டிய தேவை மக்களுக்கு உள்ளது. இவ்வாறானவர்களுக்கு இது போன்ற சட்ட உதவிகளை வழங்குவது மிகவும் உதவியாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-315)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

(தருமபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (4-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 320 |
| தக்காளி | 140 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 180 | 150 | 200 |
| பூசணி | 80 | 50 | 60 |
| புடோல் | 150 | 160 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 280 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 110 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 240 | 240 | 250 |
| பீற்றூட் | 150 | 180 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 1800 | 1500 | 2000 |
| போஞ்சி | 250 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90-100 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 120 | 150 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 50 |
| வல்லாரை | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 120 | -- | 120 |

# நாவற்குழி விகாரையின் முடி திறப்பு நிகழ்வு



(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி ஸ்ரீ சமித்தீ சுமன விகாரையின் முடி திறப்பு நிகழ்வு நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திர சில்வா கலந்து கொண்டு விகாரைக்கான முடியினை (கலசம்) திறந்து வைத்தார்.

மேலும் பௌத்த மதத் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள்,பொலிஸ் அதிகாரிகள்,பொதுமக்கள் எனப்பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.(4-30)


## மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பயிர்ச்செய்கை காணிகள் சிறுபோக செய்கைக்கு குத்தகைக்கு விடப்பட உள்ளது

மேற்படி எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழும் முற்கொம்பன் மிருசன் குளத்தின் கீழும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் பின்வரும் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள பயிர்ச்செய்கை காணிகளில் எமக்கு வழங்கப்பட்டுள்ள சிறுபோக செய்கைக்கான பங்குகளினை 2023 ஆம் ஆண்டு சிறுபோக செய்கைக்கு மட்டும் வழங்குவதற்கு முகாமைக்குழு தீர்மானித்திருப்பதால் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள விரும்புவோர் காணியுடன் ஏக்கர் ஒன்றிற்கு தங்களால் வழங்கக்கூடிய ஆகக்கூடிய தொகையினைக் குறிப்பிட்டு தொலைபேசி இலக்கத்துடன் மூடு தபால் உறையில் இட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ. 23.03.2023 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு** - பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள தெரிவுசெய்யப்படும் விவசாயிகள் கோரியுள்ள குத்தகைத்தொகையினை முழுமையாக முன் குத்தகையாக செலுத்துதல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**காணிகள் விபரம்**

1. உருத்திரபுரம் 09ம்வாய்க்கால் கமக்காரஅமைப்பின் கீழ் 02 ஏக்கர்
2. மகிழங்காடு கமக்காரஅமைப்பின் கீழ் நாகபூசணி வயல் 10 ஏக்கர்
3. முற்கொம்பன் மிருசன்குளம் கமக்கார அமைப்பின் கீழ் 01 ஏக்கர்
4. மகிழங்காடு கமக்கார அமைப்பின் கீழ் உலாந்தா கமம் 14 ஏக்கர்

**தொடர்பு முகவரி:-**
**ச.மோகனபவன்,**
**தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்தி நகர், கிளிநொச்சி.**

**தொலைபேசி இலக்கம்**
**077 324 0950**
**021 492 3118**

(c-6183)



## தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை பதவி வெற்றிடங்கள்

1. நிர்வாக உத்தியோகத்தர்
   * வைத்தியசாலை நிர்வாக சேவையில் ஐந்து வருட அனுபவம். உயர்தர A/L சித்தி, கணணி அறிவு அல்லது.
   * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரி (BSC, BSC nursing, BCom, BA, BBA )
2. அலுவலக எழுதுவினைஞர்
   * உயர்தர A/L சித்தி, கணணி அறிவு, NVQ Level-4
3. வெளிக்கள உத்தியோகத்தர்
   * உயர்தர A/L சித்தி
4. ஆய்வுகூட உதவியாளர்
   * ஆய்வுகூடப் பயிற்சி நெறி நிறைவு செய்தோர்
   * முன்அனுபவம் விரும்பத்தக்கது
5. சந்தைப்படுத்தல் முகாமையாளர்
   * BBA அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரி
   * இரண்டு வருட முன்னனுபவம்

6 தாதிய உதவியாளர்
   * நோயாளர் விடுதி, சத்திர சிகிச்சை கூடங்களில் பணியாற்றிய முன் அனுபவம்

சுயவிபரக் கோவையினை தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பளை என்னும் முகவரிக்கு அல்லது மின்அஞ்சலுக்கு tellicophospital@gmail.com 25.03.2023 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**மேலதிக தகவல்களுக்கு:- 077 134 9963** (c-6181)



## கணக்காய்வு செய்வதற்கான கேள்விக்கோரல்

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் சகல கணக்கு நடவடிக்கைகளையும் நல்லமுறையில் ஒவ்வொரு வருடமும் காலாண்டு. அரையாண்டு. வருடாந்த இறுதி கணக்காய்வுகளை உரிய காலப்பகுதிக்குள் செய்து கணக்காய்வு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நிறுவனங்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

தாங்கள் ஒவ்வொருவரினதும் தெளிவான கேள்விக்கோரிக்கையினை கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு 30.03.2023 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது மூடு தபால் உறையில் இட்டு நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமக்கு கிடைக்கப்பெறும் கேள்விக்கோரிக்கைகள் அனைத்தும் 05.04.2023 காலை 10.00 மணிக்கு எமது முகாமைக்குழு முன்னிலையில் திறக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**குறிப்பு - கணக்காய்வினை மேற்கொள்ள விரும்பும் கணக்காய்வு நிறுவனத்தினர் தாங்கள் சிறுவர் இல்லத்திற்கு நேரில் வருகை தந்து கணக்கு நடவடிக்கைகள் தொடர்பில் விபரத்தினைப் பெற்று தங்களின் கூறுவிலையினை குறித்த திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**ச.மோகனபவன்,**
**தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்தி நகர், கிளிநொச்சி.**

**077 302 4349, 021 492 3118**

(c-6182)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

தவணை கல்விச் செயற்பாடுகள் நடைபெறும்.

2022ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக, மே மாதம் 13ஆம் திகதி முதல், மே மாதம் 24ஆம் திகதி வரை, முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட விடுமுறை வழங்கப்படவுள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தர (உ/த) பரீட்சை காரணமாக 2023ஆம் ஆண்டுக்கான இரண்டாம் தவணை விடுமுறை ஒக்ரோபர் 14 முதல் நவம்பர் 12 வரை வழங்கப்படும்.

இதன்படி மூன்றாம் தவணை விடுமுறை டிசம்பர் 23 முதல் 2024 ஜனவரி 1 வரை வழங்கப்படும். அனைத்து சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கும் பாடசாலை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண கல்வி செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலய கல்வி பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஐ.எம்.எப்...

கேகாலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு, பல்வேறு கருத்துக்களை வெளியிடும் எதிர்க்கட்சிகளும், ஏனைய கட்சிகளும் அது குறித்து பேசுவதற்கும் மாற்றுக் கருத்துக்களை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## அராலியில்...

ரக வாகனம் நயினாதீவிலிருந்து வந்து கொண்டிருந்த பேருந்து மீது மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பட்டா ரக வாகனத்தின் சாரதியான இளைஞனே உயிரிழந்தவராவார்.

இந்நிலையில் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகிய இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,9,33,104)

## யாழ்ப்பாணத்தில்...

விளையாட்டுக்கழகம் நடத்திய மரபியல் ரீதியான பொங்கல் விழா நேற்று யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றியபோதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் எனத் தொடங்கி தற்போது ஜனநாயக வழியில் அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு முடிவு கட்ட பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் கூறினார். (ம-7,9,104)

## வடக்குக்கு...

தில் ஆயிரத்து 244 மெற்றிக்தொன் உரமும், வவுனியாவில், 821 மெற்றிக் தொன் உரமும், கிளிநொச்சி மாவட்டத்தில், 820 மெற்றிக் தொன் உரமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 694 மெற்றிக் தொன்னும் யாழ்ப்பாணத்தில் 297 மெற்றிக் தொன் உரமும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள 36 ஆயிரம் மெற்றிக் தொன் உரம், விவசாய அமைச்சிடம் இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது. (ம-7,9)

## வாள்வெட்டுச்...

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 2 மோட்டார் சைக்கிள், 3 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் ஒன்றில் தொடர்புபட்ட வட்டுக்கோட்டை பகுதியினை சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த இருவரிடம் முன்னெடுத்த விசாரணைகளின்போது சுடலையொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு வாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்த நிலையில் மேலும் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் மானிப்பாய் நகரப் பகுதியில் உள்ள கம்மாலை ஒன்றில் வாளினை தயாரித்த அதன் உரிமையாளரை கைது செய்த நிலையில் குறித்த நபரிடம் இருந்து மேலும் ஒரு வாளினை கைப்பற்றியிருந்தனர்.

இதேவேளை கம்மாலை உரிமையாளருக்கு உதவி புரிந்த இளைஞர் ஒருவரையும் வாள்வெட்டிற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளினை உதிரிப்பாகங்களாக்கி வெவ்வேறு பகுதிகளில் இட்ட ஒருவருமாக மொத்தமாக ஐந்து பேரையும் பொலிஸார் கைது செய்ததோடு வாள்வெட்டு சம்பவத்திற்காக பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றினர். (ம-7,9,33)

## இலங்கைக்கு...

எப்போதும் நம்பிக்கை கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு இலங்கையின் உண்மையான நண்பர்கள் இலங்கையுடன் உறுதியாக நிற்பது அவசியமாகும்.

கலாசாரம் என்பது மக்களுக்கு இடையேயான பரிமாற்றத்தின் ஒரு வெளிப்பாடாகும்.

இன்றும் நாம் பல வற்றை பரிமாறிக் கொள்கிறோம். இலங்கை எமது பகிரப்பட்ட வரலாற்றின் ஒரு பகுதியாகும்" என்றார். (ம-7,9)

## பதவி...

போதே அவர் இதனைக் கூறினார்.

அரசியலமைப்பின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்க அமைச்சருக்கு அதிகாரமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால் திருட்டுத்தனமான பாதையில் மீண்டும் செல்ல தயாராக வேண்டாம் என அரசாங்கத்திற்கு ஜே.சி. அலவத்துவல அறிவுறுத்தினார். (ம-7,9)

## 1.1 மில்...

யிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மொத்தமாக 1,127,758 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். கடந்த ஆண்டு 911757 கடவுச்சீட்டுக்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக 311,269 பேர் பயணம் செய்துள்ளனர்.

இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பயணித்தவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் செய்துள்ளனர். (ம-7,9)

## திருட்டுடன்...

மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஐ.பி.நிதர்சனின் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் 22, 24, 26 வயதுடையவர்கள் என்பதுடன், அவர்கள் வட்டுக்கோட்டை, சங்கானை, நாவற்குழி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் மூவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,33,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 076 097 3127

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 18/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1518
கடகம் 5 6 0 7 9 4

### தன நிதானய

திகதி - 2023.03.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1093
Q 03 14 31 65

### கொவிசெத

திகதி 2023.03.18
சீட்டிழுப்பு இலக்கம் 3305
P 31 39 67 70

### மெகா பவர்

திகதி 18/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1411
M 12 29 67 70 79

### ஹந்தஹன

சீட்டிழுப்பு திகதி 2023.03.18
சீட்டிழுப்பு இலக்கம் 372
மிதுனம் 05 27 38 51 மிதுனம்

### மஹஜன சம்பத

திகதி 2023/03/18
சீட்டிழுப்பு இலக்கம் 5063
M 3 5 5 4 0 3

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2038
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.18
தினம் சனிக்கிழமை
S 13 47 67 70
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 3,493,200/-

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.18
சீட்டிழுப்பு இல : 4199
வர்ணம் : இளம் பச்சை
ரூ. 5,225,200/-
23 52 73 75 H

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 4,077,284/-
திகதி 2023-03-18
வெற்றி வாரம் 3750
வர்ணம் இள நீலம்
08 13 31 61
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,498,600/-

### லக்பதி

சீட்டிழுப்பு வாரம் 1214
வர்ணம் சிவப்பு
2023.03.18 சனிக்கிழமை
I 06 04 12 46 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 314,486,012.20

### சுவர்ண வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 580
திகதி 2023-03-18
வர்ணம் செம்மஞ்சள்
I 12 25 34 06
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 18,194,544/-

### அத கோடிபதி

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1864
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.18
ரூ. 5,823,160/-
08 20 22 77 N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1992 பூரட்டாதி 4 ஆம் பாதம் மீன இராசி அரச வங்கியொன்றில் உயர் பதவி வகிக்கும் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. கிரக பாவம் - 25

தொடர்புகளுக்கு (14873)

**076 561 4313**

## வேலையாட்கள் உடன் தேவை

Happy Home Restaurant & Guest House நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை.

- Kitchen helper
- Table waiter

- தங்குமிட வசதி, சாப்பாடு வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொருத்தமானவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நேரில் வரவும். (C-6384)

தெல்லிப்பளை றோட், வட்டுக்கோட்டை. 076 543 3338 / 077 438 6508

## உடனடி வேலைவாய்ப்பு

கிளிநொச்சி நகரத்தில் இயங்கி வரும் பிரபல்யமான மொத்த, சில்லறை மற்றும் ரான்ஸ்போட் வர்த்தக நிலையத்திற்கு வியாபார ரீதியான கணினி அறிவுடைய நபர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியினர் விரும்பத்தக்கது. (14935)

தொடர்புகளுக்கு

**077 870 2260**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம். திருமணத்திற்கு வெளிநாடு செல்ல விரும்பும் மணமக்கள் உடனடியாக தேவை. எல்லா வயதினரும் தொடர்பு கொள்ளவும்.

**தாயத்திரி திருமண சேவை**

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
076 835 1932 / 021 223 2222
வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242 Laufen, Swiss
Tel: 0041768185443 Whatsapp இல் மட்டும் (14942)

## மோதலில் ஒருவர் பலி

கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விருந்தின் போது ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞனே உயிரிழந்தவராவார்.

போர்ட் சிட்டி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தின் போது இடம்பெற்ற தாக்குதலிலேயே இளைஞன் உயிரிழந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7.9)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 17 பாவம் பூராடம், ஒரே மகன் சொந்தமாக வீடு, ஓட்டோ உண்டு. தனியார் நிறுவனத்தில் நிரந்தர வேலையுடன் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை)

**074 018 2267**
**077 625 2654** (14877)

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6187)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6187)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## Y.M.C.A (தும்பசிட்டி)

பௌதிகவியல் வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் கடந்தகால துரித மீட்டல் வகுப்பு 25.03.2023 ஆரம்பம்.

தொடர்பிற்கு :

**077 600 4896**

தரம் 6 - 11 வரையான சகல பாடங்களும் நடைபெறுகின்றன. தரம் 11 இற்கான துரித மீட்டல் வகுப்பு ஆரம்பமாகிறது.

தொடர்பிற்கு :

**077 699 9007** (14949)

## சொர்க்கம் திருமண சேவை

1. கனடாவில் வசிக்கும் சுவாதி நட்சத்திரம் 1976 இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
2. 1980 இல் பிறந்த ரோகிணி நட்சத்திரம் ஜேர்மனியில் PR உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (14945)

தொடர்புகொள்ள : சொர்க்கம் திருமண சேவை
கனடா : 0014166661855
யாழ்ப்பாணம் : 077 887 6969

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர். (14947)

+14372446737
+16476571347 Canada
077 240 9276 Srilanka

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (14739)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970

## தனா பியூட்டி பஷன்

அழகுக்கலை வகுப்புக்கள் தனியாக மற்றும் குழுவாக நடைபெறுகின்றன. ஆர்வமுள்ளவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு

**077 601 8563**

No.101, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (14852)

## வீடு வாடகைக்கு / விற்பனைக்கு

உங்கள் வீடு வாடகைக்கு வழங்க அல்லது வீடு/ காணி விற்பனைக்கு இருந்தால் உங்களுக்கு சிறந்த முறையில் தீர்த்து தரப்படும். (14950)

RR.Estate

**077 473 7737**

## கடன் வசதி

**நீங்கள் வியாபாரம் ஒன்று நடத்துபவரா?**

அப்படியானால் உங்களுக்கு தேவையான கடன் வசதி எம்மால் செய்து தர முடியும். வட்டி 5% மட்டும். இது நடைமுறை கணக்கு (Current Account) வைத்திருப்பவர்களுக்கு மட்டும். (14950)

SJ FINANCE

**077 473 7737**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (14941)

தொடர்பு

**077 367 1062**

## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் செல்லத்துரை வீதியில் காணிகள் விற்பனைக்கு உண்டு. 6 பரப்பும், 3 பரப்பும். வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்தது. தரகர் தேவையில்லை. (14922)

**074 010 6595**

## தீபம் கல்வி நிலையம்

இல. 11, டேவிட் வீதி (கலைக்கோட்டம் அருகில்) யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டு - 2023**

### தரம் 06 முதல் O/L வரை

**தமிழ் மொழிமூலம்/ English medium**

ஆரம்பம் : 25.03.2023 (சனி) மாலை 3.30 மணி

அன்பான பெற்றோர்களே!

- பெற்றோர், மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இவ் கல்வியாண்டில் நிறுவன இயக்குனரும், விஞ்ஞான பாடத்தை கற்பிப்பதில் பல வருட அனுபவம் கொண்டவருமான திரு.S.Kobi sir அவர்கள் தரம் 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புக்களிற்கும் ( தமிழ் , ஆங்கில மொழி மூலம்)விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பார் என்பதனை தங்களிற்கு அறியத்தருகின்றோம்.
- (வரலாறு, விஞ்ஞான) பாடங்களிற்கு தனிப்பாட அனுமதி வழங்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
- தரம் 10,11 இற்கு ICT, வர்த்தகம், தமிழ் இலக்கியநயம், ஆங்கில இலக்கியநயம் (English literature) ஆகிய பாடங்களும் நடைபெறுகின்றன. (13944)

'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்' தொடர்புகளுக்கு [illegible]

## றோயல் நெய்

சாப்பிடும் சாப்பாடு சுத்தமாக இருக்க வேண்டும் என நினைக்கின்றோம், ஆனால் நல்ல மணமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோமா? அப்படி மணமாக இருந்தாலும் பரவாயில்லை தரமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோமா? சுத்தமான நெய் என்று நினைத்து பொய் பொய்யா நெய் வாங்கி ஏமாந்த காலம் போதும் அசல் நெய்யோட தரமும் மணமும் எப்படி இருக்கும் என்று நாங்கள் சொல்லித்தருகின்றோம்.




**தரமான சுத்தமான நெய் பற்றி நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்**

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்ற உடலுக்கு ஆரோக்கியமான அறுசுவை சமையலுக்கு ஏற்றதான சுத்தமான நெய் எங்கள் றோயல் சுத்தமான நெய்.

**தரம் மணம் நிரந்தரம். றோயல் நெய் எப்பவுமே முதற் தரம்**

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமண பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

Packed By:
Royal Industries®

தொலைபேசி :
021 222 2567 (C-6185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.